# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 ஆகஸ்டு - 2001 இதழ் - 8



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபையார்,

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@

# இப்பொழுதே ஆயத்தமாகுங்கள்



**கர்த்தருக்குச்** சித்தமானால், **காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும், உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்** இணைந்து நடத்தும், "***நான்காவது வேதாகம கருத்தரங்கம்***" எதிர் வரும் ***அக்டோபர் திங்கள் 25, 26*** (வியாழன், வெள்ளி) ஆகிய தேதிகளில் (அரசு விடுமுறை நாட்கள்) நடைபெற உள்ளது.

தமிழகம் தழுவிய அளவில் நடைபெறும் இக்கருத்தரங்கில், தாங்கள் குடும்பமாகவும், சபையாகவும் கலந்து கொள்ள விரும்புகிறோம். ஜெபியுங்கள்! ஆயத்தமாகுங்கள்!!

ஆசிரியர்

# ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | புதிய பிறப்பு | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 12 |
| 4. | வாலிபர் பகுதி | 15 |
| 5. | எஸ்தர் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 6. | சிறுவர் பகுதி | 20 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 22 |
| 8. | வேதாகமக் கேள்வி பதில் | 29 |
| 9. | விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை | 30 |

# THIRUMARAI AASAAN

Published by Church of Christ

Editor **S. RAJANAYAGAM** — Honorary Editor **J.C. CHOATE**

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol.14 August 2001 Issue-8


ஆசிரியர் உரை

## "எப்பாப்பிரா"

இந்தக் கட்டுரைக்காக, நான் என்னை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்த போது, ஓர் அன்புச் சகோதரன் வந்தார். அவரிடம் நான், இம்மாதம் எப்பாப்பிரா என்றேன். நான் என்ன சொல்லுகிறேன் என்பது புரியாமல் முழித்தார். மறுபடியும் நான், எப்பாப்பிரா தெரியுமா என்றேன். சுமாராக சுதாரித்துக் கொண்ட அவர், ஓர் ஊரின் பெயர்தானே என்றார். இல்லை, ஆளின் பெயர் என்றேன். சற்று யோசித்த கையோடு, எங்கும் கேட்ட மாதிரியோ அல்லது வாசித்த மாதிரியோ இல்லையென்று சொல்லிக்கொண்டு அப்படியே பேச்சை மாற்றினார். இத்தனைக்கும் அவர் வேதத்தை விரும்பிப் படிப்பவர். தேவச் செய்திகளை ஆவலோடு கேட்பவர். ஆனால், இவருக்கே, நம்முடைய "எப்பாப்பிரா" யார் என்று தெரியவில்லை. கண்டிப்பாக, வேத வசனங்களைப் படிக்கும் போது, போகிறபோக்கில் வாசிக்கப்படுகிறவர்களின் பட்டியலில் சேர்க்கப்படத்தக்கவரல்ல இந்த எப்பாப்பிரா. ஏனெனில், வேத வசனங்கள் இவரை வெகுவாக மெச்சுகிறது. பரலோகத்தின் தேவன் இவன் பற்றி பலமாக சாட்சி பகர்கிறார். ஆயினும், நாம் இவனை லாவகமாகப் புறம் தள்ளிவிட்டோம். இப்போக்கு, கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தாங்களே இழைத்துக் கொள்ளும் அநீதிகளில் ஒன்று என்று நான் தயங்காமல் கூற விரும்புகிறேன்.

ஆகவே தான், ஒவ்வொரு வருடமும், ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில், பரிசுத்த வேதாகமத்தால் பாராட்டப்பட்டும், உன்னதரால் உயர்த்தப்பட்டும், நம்மால் தள்ளிவிடப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களின் மேன்மையையும், அப்படிப்பட்டவர்களை அறிந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தையும், அவர்களாலே, நாம் கற்றுக் கொள்ள முடிகின்ற பாடங்களையும் எடுத்துரைத்து வருகிறேன். இப்பணிக்கென, வருடத்திற்கு ஒரு

மாதத்தை ஒதுக்கி வந்துள்ளேன். அவர்களனைவரும் உங்களுக்கு நினைவிருக்க நியாயமில்லை. ஏனெனில், பிரபலங்களுக்குச் சலிப்பில்லாமல் சலாம் போடுவதும், சாமானியர்களுக்குச் சட்டென விடை கொடுத்துத் தாட்டி விடுவதும், நமக்குக் கைவந்த கலையாயிற்றே! இவ்வழக்கம், நமது ஆன்மீக வாழ்வையும் விட்டு வைக்கவில்லையென்பது கவலைக்குரிய ஒன்று. இதைத் தொடர்வதன் மூலம், "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்..." (யோவான். 5;39) என்ற வசனத்திற்கு, நம்மையுமறியாமல் நாம் ஊறு விளைவித்துக் கொண்டுள்ளோம்.

சரி, நானும் மறந்து விடுவதற்கு முன்பாக, அம்மாமனிதர்களை, உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன், கவனித்துக் கொள்ளுங்கள்.

1. வீரத்தின் விளைநிலமாய் வாழ்ந்த, நெஞ்சுரம் கொண்ட **"சம்மா"** (2. சாமு. 23;11,12)
2. இயேசுவின் ஊழிய நாட்களில் அவரைச் சத்தமிட்டுக் கூப்பிட்ட **"பர்திமேயு"** என்ற பார்வையற்ற மனிதன் (மாற்கு. 10;46-58)
3. பவுலடியாரின் காலத்தில் இருந்த **"ஒநேசிப்போரு"** (2. தீமோ. 1;16-18)
4. சமாரியாவிலுள்ள **"சீகார் ஊரார்"** (யோவான். 4;1-30)
5. அப்போஸ்தலன் யோவானால் மெச்சப்பட்ட **"காயு"** (3. யோவான் 1-6)
6. நமதாண்டவரால், திமிர்வாதக்காரன் சுகமாக்கப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட **"நாலுபேர்"** (மாற்கு. 2:3) மற்றும்
7. பவுலின் ஊழியத்தோடு நெருக்கம் கொண்ட **"தீகிக்கு"** (எபே. 6:21) என்பவர்கள்.

இப்பட்டியலில் தன்னையும் இணைத்துக் கொண்டு, நமக்குச் சில பாடங்களைக் கற்றுத் தர இவ்வருடம் தயாராயிருப்பவன் "எப்பாப்பிரா" என்னும் ஒரு தலைசிறந்த தேவ மனிதன். வேதாகமம், இவன் பற்றி மிகக் குறைவான இடங்களிலே பேசினாலும் (கொலோ 1;7 கொலோ. 4;12 பில. 23). இவன் காரியங்கள் வெகு சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இவன் பற்றி அதிகமாக அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை அதிகமாக வருகிறது. ஆனால், வேதாகமத்தின் பக்கங்கள் நமது ஆசைக்கு ஏனோ ஆதரவு தரவில்லை.. இருப்பினும், கிடைக்கின்ற தடயங்களை ஆதாரமாக வைத்து, இவன் பற்றி முடிந்தளவு தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

அப்போஸ்தலன் பவுல் எபேசுவிலே தங்கி ஊழியம் செய்த நாட்களில், இவன் உபதேசிக்கப்பட்டு, கிறிஸ்தவனாகியிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. பிறகு, கிறிஸ்துவின் பிரதான கட்டளையை (மத். 28;18-20) நிறைவேற்றும் பொறுப்பு தனக்கும் உண்டென்பதை உணர்ந்து, அப்போஸ்தலன் பவுலின் வழிகாட்டுதலின்படி, எபேசுவிலிருந்து சுமார் 100 மைல் தொலைவிலிருந்த, பிரியாவின் லைகஸ் பள்ளத்தாக்குப் பட்டணங்களாகிய எராப்போலி, கொலோசே, லவோதிக்கேயா போன்ற நகரங்களில் நற்செய்தி அறிவித்தான். அப்பட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்ட மூன்று சபைகளும் இவன் பிரயாசத்தின்

பலன்களே. அவைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது கொலோசே பட்டணத்து சபை. அந்நாட்களில், வாணிப முக்கியத்துவம் வாய்ந்த இப்பட்டணத்துச் சபையில், புறவினத்தார் பெருமளவிலும், யூதர்கள் கணிசமான அளவிலும் இருந்தனர். இச்சபையின் வளர்ச்சி வேகம் சராசரியைக் காட்டிலும் மிக அதிகம்.

'விவேகம் இல்லாத வேகம்' ஆபத்து என்ற பொதுவான கருத்தின்படியான ஒரு நிலை, இச்சபையிலும் ஏற்பட்டது. ஆம், அச்சபையிலிருந்த யூதர்கள், மோசேயின் பிரமாணங்களின்படியான கொள்கைகளையும் மற்றவர்கள் உலக சித்தாந்தங்களின் அடிப்படையிலான கோட்பாடுகளையும் கைவிட மனதில்லாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு அவைகளையும் இணைத்துப் பின்பற்ற முடியுமென நம்பினர். இதன் விளைவாக, மெய் மார்க்கமாகிய கிறிஸ்தவத்திற்கும், அதன் உன்னத உபதேசத்திற்கும் விரோதமான உலகியல் தத்துவங்கள் உயிர்பெற்று, மேலோங்கியது. கிறிஸ்துவின் போதனைகள் இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டது. இவ்விபரீத நிலையைக் கண்டு பதறிப்போன எப்பாப்பிரா, கிறிஸ்துவின் சிலுவை வீணாகிறதைக் கண்டு, பொறுக்க மனதில்லாமல், தன் ஆவிக்குரிய ஆசானின் அறிவுரையை நாட முடிவெடுத்தார். ஆனால், அந்த ஆசானாகிய பவுலோ, வெகு தூரத்திலிருந்த ரோமச் சிறையில் கைதியாக இருந்தார். அயினும், ஆத்தும பாரம், இந்த எப்பாப்பிராவை வெகுவாக வாட்டியபடியால், ஆபத்துக்கள் பலவற்றை உள்ளடக்கிய ரோமப் பயணத்தைத் துணிவாய் மேற்கொண்டு, அவரை ரோமில் சந்தித்து காரியங்களை வினயத்தோடு விவரித்தான்.

இவனுடைய ஆர்வத்தாலும், ஆத்தும பாரத்தாலும் கவரப்பட்ட பவுலடியார், இவன் சொன்ன காரியங்களையெல்லாம் உள்வாங்கி, பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு, ரோமச் சிறையிலிருந்து, கொலோசே பட்டணத்தாருக்கு நிருபம் எழுதினார். ஆகவேதான், இது, சிறை நிருபங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நிருபத்தில் இடம் பெற்றுள்ள, சில வசனங்களை நீங்கள் கவனமாக கவனித்தால், இந்நிருபம், இந்தப் பின்னனியில் தான் எழுதப்பட்டுள்ளதென்ற என் கருத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்வீர்கள். "...நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும், அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவிலே விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள்..." (1;9,10). "நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு, அசையாமல் ஸ்திரமாயும், உறுதியாயும், விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்" (1;22). "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" (2:8)

இப்படிப் பெரும் நோக்கோடு எழுதப்பட்ட இந்நிருபத்தில் தான், நம்மவர்களால் சுத்தமாகத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிற, எப்பாப்பிராவை பரிசுத்த ஆவியானவர், அர்த்தம் செறிந்த வார்த்தைகளால் அலங்கரிக்கிறார். ஆம், இவன் பற்றிய ஆவியானவரின் ஏவுதலாலான பவுலின் வார்த்தைகளைப் பாருங்கள். **"அதை எங்களுக்குப் பிரியமான உடன் வேலையாளும், உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்"** (1;7) அடுத்து, **"எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய இவன் நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்"** (4:12) இவ்வளவு சிறப்புக்களுடன் அலங்கரிக்கப்பட்டிருக்கிற இவனை நாம் அடையாளம் கண்டு எப்பொழுதாகிலும், இவனை மெச்சியிருக்கிறோமா? இவன் பற்றி நாலு வார்த்தைகள் தான் பேசியிருக்கிறோமா? அல்லது எப்பொழுதாவது எழுதித்தான் இருக்கிறோமா? அல்லது குறைந்தபட்சம் இவன் பற்றி வேத வசனங்களில் வாசிக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களில், அடப் பரவாயில்லையே என்று எண்ணித்தான் இருக்கிறோமா? சொல்லுங்கள்.

சரி, போனது போகட்டும். இப்பொழுதாகிலும், இவன் பற்றிய வேத வசனங்களின் அலங்கரிப்பைக் கொண்டு, சில பாடங்களை நமக்காகக் கற்றுக் கொள்வோம்.

## I. "எப்பாப்பிரா" அவர்களில் ஒருவனாயிருந்தான் (4:12)

எப்பாப்பிராவிடமிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், அவன் அவர்களில் ஒருவனாயிருந்தான் என்பது.

அப்போஸ்தலனாகிய பவுல், கொலோசெயருக்கான நிருபத்தில், "எப்பாப்பிராவை" உங்களைச் சேர்ந்தவன்" என்று கூறுகிறார். (4:12). இதற்கு, ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளின் நேரடிப் பொருள், **"அவன் உங்களில் ஒருவன்"** என்பது. எப்பாப்பிரா பற்றிய, பவுலின் இவ்வார்த்தைகளை யாரும் சாதாரணமாக எண்ணிவிட வேண்டாம் இவ்வார்த்தைகள், எப்பாப்பிராவின் தாழ்மைக்கும், அடக்கத்திற்கும், பெருந்தன்மைக்கும் எடுப்பான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கொலோசே பட்டணத்துச் சபையில் இருந்த அநேக அங்கத்தினர்களில், தானும் ஒருவனாக இவன் இருந்துள்ளானேயொழிய, தன்னை அவர்களிலும் மேலானவனாக ஒருபோதும் காட்டிக்கொள்ளவில்லை. இத்தனைக்கும், அப்பட்டணத்தில் ஊழியத்தை ஆரம்பித்தவன் இவன் தான்; ஆத்துமாக்களை அறுவடை செய்தவன் இவன் தான்; கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடி வருவதற்குக் காரணமாக இருந்தவன் இவன்தான்; அவர்கள் தவறிழைத்த போது தடுத்து நிறுத்த முயற்சித்தவனும் இவன் தான். இப்படி, கொலேசே பட்டணத்திலிருந்த

எல்லாரைக் காட்டிலும், தன்னை உயர்ந்தவனாகக் காட்டிக் கொள்வதற்குச் சகல தகுதிகளும் இவனுக்கு இருந்தது. ஆயினும், இவன், கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், அவர்களில் ஒருவனாகவே தன்னைக் காத்துக் கொண்டான். கிறிஸ்துவின் சபைக்குள்ளாக இருக்கும், சகோதரர்களுக்கிடையே இருக்க வேண்டிய பரஸ்பர அன்பிற்கும், இணக்கத்திற்கும் இவன் சான்றாகத் திகழ்கிறான். தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்துக்காகக் கூட எப்பாப்பிரா கவலைப்பட்ட மாதிரி தெரியவில்லை. அப்போஸ்தலன் பவுல், ரோமபுரியாருக்குச் சொல்லும்போது, உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு **மிஞ்சி** எண்ண வேண்டாமென்று (ரோமர். 12;3) தான், எச்சரிக்கிறார். ஆனால், இவனோ, **எண்ண வேண்டிய** அளவுக்குக் கூட எண்ணாத பெருந்தகையாக, இருந்துள்ளான்.

அருமையானவர்களே, எப்பாப்பிராவுக்குள்ளாக இருந்த இந்த அரிய குணம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளாகவும் இருக்க வேண்டியது அவசியம். அதிலும் குறிப்பாக, கிறிஸ்துவுக்காக சற்று அதிகமாகப் பாடுபடும் சிலாக்கியம் பெற்றோருக்குள்ளாக இக்குணம் அவசியம் இருக்க வேண்டும். ஏனெனில்; கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒரே சரீரம் என்றும் (எபே. 4;4), அந்த ஒரே சரீரத்தின் அவயவங்கள் என்றும் வசனம் கூறுகிறது. (எபே. 4:25). இன்னும் சபையானது, தேவனுடைய மாளிகை என்றும் (எபே. 2;21) அதின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஜீவனுள்ள கற்களென்றும் வேத வசனங்கள் அழகாக எடுத்துரைக்கிறது. ஆகையால், ஒருவன் மற்றவனுக்கு மேலாகப் பெருமை பாராட்டுவதற்கு ஒன்றுமேயில்லை. கிறிஸ்துவே எல்லாமுமாக இருக்கிறார்!

அன்பானவர்களே, இன்றைக்கு கிறிஸ்தவ அமைப்புக்குள்ளும், கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி இயங்குகிற பிரிவினைச் சபைகளுக்குள்ளும், ஏன், கிறிஸ்துவின் சபைக்குள்ளும் நிலவும் அநேக பிரச்சினைகளுக்கும் அடிப்படை என்ன? சந்தேகமில்லாமல் அகந்தை தான். பிரச்சினைக்கும், பிரிவினைக்கும், வம்புக்கும், வழக்குக்கும் அது தான் வித்து. இவ்வுண்மை தெரியாமல், அநேகர், இதற்கு உரமும், தண்ணீரும் இட்டு வளர்க்கின்றனர். இதன் விளைவாக, கிறிஸ்தவ அமைப்புகளையும், கிறிஸ்தவ சபைகளையும், சமுதாயம் வேடிக்கை பார்க்கும் நிலை தோன்றியுள்ளது. "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும்" என்ற கிறிஸ்துவின் ஜெபம் வீணாக்கப்பட்டு, இதன் மூலம் தேவனுடைய நாமம், இப்பூமியில் தூஷிக்கப்படுகிறது. நான் சொல்லும், இக்கருத்து தவறு என்று உங்களால் கூற முடியுமா? சொல்லுங்கள்.

அப்போஸ்தலன் யோவான் எழுதின மூன்றாம் நிருபத்தில், சபையிலே, முதன்மையாயிருக்க விரும்பிய "தியோத்திரேப்பு" என்ற ஒரு மனிதனைப் பார்க்கலாம். (3. யோவான். 9) வசனத்திற்கு விரோதமான அவன் செயல்பாடுகள், அச்சபையிலே எவ்வளவு பிரச்சினைகளை உண்டாக்கினதென்று வசனம் 10-ல் காணமுடியும். அதைப் போல, கொரிந்து சபை பிரச்சினைக்கும் மன மேட்டிமை தான் காரணம் என்பதைக் பவுல் கண்டு, இவ்விதம் எழுதுகிறார். "சகோதரரே,

எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களாலே, கற்றுக் கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், ..... இவைகளை எழுதினேன்" என்கிறார் (1. கொரி. 4/6).

ஆகையால், எனக்கன்பானவர்களே, கர்த்தருடைய சபையில், பல நிலைகளில் இருந்து பணிபுரியும் பாக்கியம் பெற்றிருக்கும் நாம், தியோத்திரேப்புகளாக இல்லாமல், ஒவ்வொருவரும், எப்பாப்பிராக்களாக இருப்போம். நாம் ஒவ்வொருவரும், "சபையில் ஒருவராகவே" இருப்போம். ஒருவேளை நாம் அந்தச் சபைக்காக எப்படிப்பட்ட பாடுகள் பட்டிருந்தாலும், இந்த எப்பாப்பிரா போல, "சபையில் ஒருவராகவே" இருப்போம்.

## II. "எப்பாப்பிரா" கிறிஸ்துவின் ஊழியக்காரனாயிருந்தான் (4:12)

அற்பமாக கருதப்படுகிற இந்த எப்பாப்பிராவிடமிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், "அவன் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனாயிருந்தான்" என்பது.

"கிறிஸ்துவின் ஊழியக்காரன்" என்னும் பதம் வேதாகமத்தில் மிக விசேஷமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அப்போஸ்தலர்களுக்கே உரிய ஒரு பிரத்யேக வார்த்தை. ஆம், பேதுரு, யோவான், பவுல், யாக்கோபு, யூதா போன்றவர்களுக்கே பெரும்பாலும் உரிமையாக்கப்பட்டுள்ளது. விதி விலக்காக இரண்டு பேருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில், ஒருவன் தீமோத்தேயு, மற்றொருவன் நம்முடைய எப்பாப்பிரா. இதில், தீமோத்தேயுவுக்கு, இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலை வித்தியாசமானது. சிறையில இருந்த பவுலடியார், பிலிப்பியருக்கு நிருபம் எழுதும் போது, தன்னைக் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று குறிப்பிடவேண்டிய சந்தர்ப்பத்தில், தன்னோடிருந்த தீமோத்தேயுவையும் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று சேர்த்துக் குறிப்பிடுகிறார். "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும், தீமோத்தேயுவும் ... என்று அங்கே கூறுகிறார் (பிலி. 1:1). தீமோத்தேயு பற்றி இவ்வகையில் சொல்லியிருப்பதால், அவன் கிறிஸ்துவின் ஊழியக்காரன் இல்லை என்று நான் இங்கே சொல்ல வரவில்லை. ஆனால், அப்போஸ்தலர் தவிர, எப்பாப்பிராவுக்குத்தான் இவ்விசேஷ வார்த்தை நேரிடையாக பயன்படுத்தப்பட்டுள்ளதென்று தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அருமையானவர்களே, இன்றைக்கு ஊழியம் என்ற பெயரால் ஊர்வலம் வருகிறவர்கள் எத்தனை பேர், கிறிஸ்துவின் ஊழியர்களாக உள்ளனர்? அதாவது, கிறிஸ்துவக்காக மாத்திரம் சேவை செய்பவர்களாக உள்ளனர்? பெரும்பாலனவர்களிடம் பேசிப் பார்த்தால், அவர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் அமைப்பிற்கும், ஸ்தாபனத்திற்கும், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைக்கும் தான் ஊழியர்களாக உள்ளார்களே தவிர, நம்முடைய எப்பாப்பிரா போன்று கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக இல்லை. கிறிஸ்துவையும், அவர் தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபையையும் மையப்படுத்திச்

செய்யாத ஓர் ஊழியம், எப்படிக் கிறிஸ்துவின் ஊழியமாக இருக்க முடியும்? கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் முதன்மைப்படுத்திச் செய்யாத ஊழியம், அப்போஸ்தலன் பவுலாலே கண்டிக்கப்படுகின்ற ஊழியமாகவே இருக்கமுடியும். "அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல், தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்....." (ரோமர். 16;18) என்று ரோமாபுரியாருக்கான நிருபத்தில் எழுதியுள்ளார்.

அடுத்து, ஊழியம் செய்கிறவர்களும், ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஊழியத்துக்கடுத்த, தங்களுடைய பக்திக்கடுத்த காரியங்களில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதாவது, சத்தியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும், இன்னும் அதாவது, வசனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் (யோவான் 17;17). தங்களுடைய போதனையின் ஒவ்வொரு வார்த்தைக்கும், தங்களுடைய ஒவ்வொரு செயலுக்கும் வசனத்தின் ஆதாரமும், அங்கீகாரமும் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், வசனம் தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கப்போகிறது. (யோவான். 12;48).

எப்பாப்பிரா இந்தக் காரியத்தில், மிகவும் கவனமாக இருந்தபடியால் தான், கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியன் எனறு ஆவியானவராலே அழைக்கப்பட்டுள்ளான்.

## III. எப்பாப்பிரா போராடி ஜெபிக்கிறவனாயிருந்தான் (4:12)

கொலொசே பட்டணத்துச் சபையில் ஒருவனாகவும், கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியனாகவும், இருந்த, நம்முடைய எப்பாப்பிராவிடமிருந்து, நாம் கற்றுக் கொள்ளக் கூடிய, மற்றுமொரு பாடம், அவனின் ஜெப வாஞ்சை மற்றும் உறுதி.

பவுல் தன்னுடைய நிருபத்தில், ".... **நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாகவும், பூரண நிச்சயமுள்ளவர்களாகவும் நிலை நிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் எப்பொழுதும் போராடுகிறான்**" (4:12) என்று கூறியுள்ளார்.

தம்மை நோக்கி ஏறெடுக்கப்படும் ஜெபங்கள், ஒப்புக்குச் செய்யப்படுவதாக இல்லாமல், தெளிவோடும், நோக்கத்தோடும், ஒரு தீர்மானத்தோடும் இருக்கவேண்டுமென்றே தேவன் எதிர்பார்க்கிறார். ஆகவே தான், தமது ஆவியானவரைக் கொண்டு பவுலின் மூலம் இவ்விதம் கூறியுள்ளார். "....நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவது போல நீங்களும் என்னோடு கூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோமர். 15:32) என்று. அப்போஸ்தலன் பவுல் தன் ஜெபங்களில் போராடுகிறவராக இருந்தார். அப்படிப் போராடி ஜெபிக்கும் வாஞ்சை, எப்பாப்பிராவிடம் இருப்பதைக் கண்டார். உடனடியாக

அதை மெச்சி எழுதினார்.

பழைய ஏற்பாட்டிலும், முற்பிதாக்களில் ஒருவனாகிய யாக்கோபு, தன்னுடைய காரியங்கள் நிறைவேற இராமுழுவதும் தேவனிடம் போராடினான் என்று வசனம் கூறுகிறது. ஆம், "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன்" என்று (ஆதி. 32;16) உறுதிகாட்டினான். ஜெயம் பெற்றான். நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவும் கூட பூமியிலிருந்த நாட்களில், மிகுந்த ஊக்கத்தோடே ஜெபம் செய்தார் என்று எபிரேய ஆசிரியர் கூறுகிறார். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்...." என்று. எபி. 5;7)

அப்படியானால், அருமையானவர்களே, நம்முடைய ஜெபங்கள் இன்றைக்கு எப்படி உள்ளது?, நம்மால், ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்த எப்பாப்பிரா ஜெபம் போல, அப்போஸ்தலன் பவுலின் ஜெபம் போல, தனக்காகவும், மற்றெல்லாருக்காகவும் போராடுகிற ஜெபமாக இருக்கிறதா? தேவனுடைய பிள்ளைகளெல்லாரும், தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேற வேண்டுமென்று, எப்பாப்பிராப் போல போராடி ஜெபிக்கிறோமா? நமதாண்டவர் போல, நம்முடைய காரியங்களுக்காக கண்ணீரோடும், பயபக்தியோடும் ஜெபிக்கிறோமா? யாக்கோபு சொல்வது போல, விசுவாசத்தோடு ஜெபிக்கிறோமா? (யாக். 1:6) எப்படி ஜெபிக்கிறோம்? எண்ணிப்பாருங்கள்.

எத்தனையோ முறை என் காரியங்களுக்காக, என் குடும்பத்தின் தேவைகளுக்காக, எங்களுடைய சபையின் மேம்பாட்டுக்காக விண்ணப்பம் பண்ணியும், நிறைவேறவில்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பவர்களே, நம்முடைய ஜெபங்களின் தன்மையும், இப்பொழுது பார்த்த ஜெப இலட்சணங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! தவறு எங்கே இருக்கிறதென்று பளிச்செனத் தெரியும். சகல சம்பூரணமும் நிறைந்த தேவனிடத்தில் நன்மைகளுக்குக் குறைவில்லை. **அவருடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியமான காரியம்.** (எண். 25:1) அப்படியானால், நாம் இன்னும், ஏன் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறோம்? சிந்தியுங்கள், குறைவு நம்முடைய ஜெபத்திலே இருக்கக் கூடும்.

என் அன்புச் சகோதர, சகோதரிகளே, நண்பர்களே, நம்மால் முக்கியத்துவம் தரப்படாத, எப்பாப்பிராவைக் கொண்டு, தேவன், இவ்வருடமும் சில நல்ல பாடங்களைத் தந்திருக்கிறாரென்று நீங்கள் ஒத்துக் கொள்வீர்களென நம்புகிறேன். இவன் கற்றுத் தந்த பாடங்களை, நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தினால், இம்மைக்கும், மறுமைக்குமான நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கற்றுக்கொள்வோமா? கட்டாயம் கற்றுக்கொள்வோம்.

பரலோகத்தின் தேவன் உங்களை ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

**செ. ராஜநாயகம்**

# புதிய பிறப்பு

மறுபடியும் பிறத்தல், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள்; புதிய பிறப்பு போன்ற வார்த்தைகளை ஜனங்கள் அடிக்கடி பேசுவதை கேள்விப்படுகிறோம். அப்படி அவர்கள் பேசுவதன் பொருள் என்ன? கர்த்தரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் என்று பொதுவாக தங்களைக் குறித்து குறிப்பிடுபவர்களிடம் நீங்கள் கேள்வி கேட்பீர்களா? தொடர்ந்து அவர்களை நீங்கள் கேள்வி கேட்கும்போது, மிக ஆழமான விளக்கத்தை கொடுப்பதாக எண்ணி, தேவனுடைய வசனத்திற்கு ஒவ்வாத கூற்றை அவர்கள் குறிப்பிடுவார்கள் அன்றோ?

வேதாகம சம்பந்தப்பட்ட பாடங்களாக இவைகள் இருப்பதால், வேதம் போதிப்பது என்ன என்பதையே நாம் காண விழைவோம். இதற்கு ஆரம்பமாக சம்பந்தப்பட்ட வசனப்பகுதியை வாசிப்போமாக: "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து : ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக்காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். அதற்கு நிக்கொதேமு, ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தில் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் எனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறது என்றும், இன்ன இடத்திற்குப் போகிற தென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்." (யோவான் 3:1-8).

முதலாவதாக, நாம் பேசிக்கொண்டிருக்கிற இந்தப் பிறப்பு மாம்ச

பிறப்புடன் சம்பந்தப்பட்டதல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானத்தை விலக்குவதற்கேதுவாக மாம்ச பிறப்புடன் இதை ஒப்பிட்டு வியாக்கியானம் அளிக்க முயல்பவர்களும் உள்ளனர். நிக்கொதேமுவே மாம்ச பிறப்பாகத்தான் பேசும்போது, கர்த்தர் அப்படியல்லவென்று விளக்கினார். இரண்டாவதாக, அது மாம்ச பிறப்பாக இராவிடில், அவர் பேசுவது ஆவிக்குரிய பிறப்பாகத்தான் இருக்க முடியும். எனவே, இயேசு இதனை, "ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று விளக்கப்படுத்தினார். (யோவான் 3:5). அவர் சொல்லுவது என்ன?

1. "ஒருவன்" எனும் இவ்வார்த்தை, ஆண், பெண் ஆகிய இருபாலாரையும் குறிக்கின்ற ஒரு பொதுப்படையான பதமாகும். இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், கணக்கொப்புவிக்கும் பிராயம் அடைந்த யாவரையும் குறிக்கிறது. இது குழந்தைகளை குறித்து பேசுவதே இல்லை.

2. "ஜலத்தினாலும்". இங்கு குறிப்பிடப்படுகின்ற ஜலம் அல்லது தண்ணீர் என்னும் பதம் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. இது நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்துகிற நிஜமான தண்ணீரைக் குறிக்கிறது. உருவக மொழியிலோ, அடையாள மொழியிலோ இப்பதம் பயன்படுத்தப்படும் போதெல்லாம், "ஜீவத் தண்ணீர்" என்றுதான் குறிப்பிடப்பட்டது. கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒரு முறை மட்டுமே தண்ணீர் (ஜலம்) இடம் பெறுகிறது. அது ஞானஸ்நானம். (ரோமர் 6:3,4), இதுதான் தண்ணீரிலிருந்து வெளியிலே வருதல் அல்லது புதிய பிறப்பு.

3. "ஆவியினால்", புதிய பிறப்பில் ஒருவர் ஆவியினாலும் பிறக்கிறார், ஆனால் எப்படி? தேவனுடைய வசனத்தினால். வசனம் ஆவியினால் கொடுக்கப்பட்டது, அது நல்ல இருதயத்தில் நாட்டப்படும்போது, அது கீழ்ப்படிதலை பிறப்பிக்கிறது அல்லது கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர், தனது வாழ்வை தேவனுக்கு ஒப்புக் கொடுக்கத் தீர்மானிக்கிறார், உலகத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் தான் விடுபடவும், கிறிஸ்துவுடனேகூட அவர் ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டு, தன் பாவங்களிளெல்லாம் கழுவப்பட்டு தேவனுடைய குடும்பத்திலே பிறந்த ஒரு புது மனிதனாகிறார். பேதுரு கூறுவதை கவனியுங்கள்: "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய

அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே." (1பேதுரு 1:22,23)

4. "பிறவாவிட்டால்" ஒரு பிறப்பிற்கு அத்தியாவசியமாக இரண்டு மூலக்கூறுகள் தேவை: ஜெநித்தல் (கருத்தரித்தல்) மற்றும் பிறப்பு. புதிய பிறப்பு ஆகிய ஆவிக்குரிய இப்பிறப்பில், இடம்பெறும் இரண்டு மூலக்கூறுகளில் ஒன்று. ஆவி, மற்றொன்று தண்ணீர் (ஜலம்) இந்த சம்பவத்தில் ஒருவன் ஆவியினாலே ஜெநிப்பிக்கப்பட்டு (கருத்தரித்து) ஜலத்தினாலே பிறக்கிறான். இது எவ்வளவு எளிமையானது, கர்த்தருடைய இராஜ்யத்தில் நுழைய ஒரு வழி மட்டுமே உண்டு, எனவே இயேசு இங்கே பிறவா **"விட்டால்"** என்ற எதிர்மறையில் ஆரம்பித்து பேசுகிறார்.

5. "தேவனுடைய இராஜ்யத்தில்". இது சபையாகிய தேவனுடைய இராஜ்யம். (மத்தேயு 16:18,19). இதில் நுழைய ஒரு வழி மட்டுமே உண்டு என்று இயேசு குறிப்பிடுகிறார், அவ்வழி ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறத்தல் மூலமே நடைபெறுகிறது. கிறிஸ்து தொடர்ந்து மாம்ச பிறப்பையும், ஆவிக்குரிய பிறப்பையும் வித்தியாசப்படுத்தி, காற்றை ஒப்பிட்டு விளக்குகிறார். ஒருவன் காற்றை கண்ணிலே காண இயலாது, ஆனால் காற்றின் விளைவை காணவும் உணரவும் கூடும். காற்று எப்படி செயல்படுகிறது எனக் காண இயலாது, ஆனால் அதன் செயலால் நிகழும் விளைவை தெளிவாகக் காண இயலும். ஆவியானவர் வசனத்தின் மூலம் கிரியை செய்கிறார். அதன் உபதேசத்துக்கு ஒருவர் கீழ்படியும் போது அவன் கர்த்தருடைய இராஜ்யத்தில் நுழைந்து ஆவியின் கனிகளை கொண்டு வருகிறார். (கலாத்தியர் 5:22,23).

இறுதியாக, இரட்சிக்கப்படுவதற்கு அல்லது இராஜ்யமாகிய சபையில் நுழைவதற்கு இரண்டு, வழிகளை கூறுவதில்லை. புதிய பிறப்பைக் குறித்த போதனை. மாற்கு 16:16 மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள் 2:38 உடன் முழுமையாக ஒத்துப் போவதுடன், ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்ற அனைத்து வசனங்களுடனும் ஒத்துப் போகிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஒருவர் சத்தியத்தைக் கேட்கும்போது (ரோமர். 10:17), அதை விசுவாசிக்கிறார் (ரோமர் 10:10), தன் பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார் (அப்போஸ்தலர் 17:30), கிறிஸ்துவை அறிக்கையிடுகிறார் (ரோமர் 10:10), ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார். (அப்போஸ்தலர் 2:38; 22:16), இந்த செயல்பாடுகள் மூலம் ஒருவர் மறுபடியும் பிறந்து கர்த்தருடைய சபையில் நுழைகிறார் (1கொரி. 12:13; அப்போஸ்தலர் 2:47). கேள்வி என்னவெனில் தேவனுடைய வசனத்தின்படி நீங்கள் மறுபடியும் பிறந்துள்ளீர்களா? என்பதுதான்.

**J.C. CHOATE** **J.C.சோட்**

*பெண்கள் பகுதி*



# குடும்பத்தைப் பற்றிய உங்கள் பிள்ளைகளின் நினைவு எப்படியிருக்கப்போகிறது?

**எ**ல்லாக் கிறிஸ்தவப் பெற்றோர்களுமே, தங்கள் பிள்ளைகள் தங்கள் குடும்பத்தைப் பற்றியதான சில சிறந்த நினைவுகளை வைத்திருக்க வேண்டும் என்ற அக்கறையுள்ளவர்களாயிருப்பார்கள். தன் தகப்பன் வீட்டிற்கு திரும்ப வருவதற்கு, அந்த மனம் திரும்பிய மைந்தனுக்கு (லூக். 15:16-20) தன் தகப்பன் வீட்டைப் பற்றிய **நினைவு**தான் காரணமாயிருந்தது. லூக்கா 16:25-ல் உள்ள ஐசுவரியவானைப் பார்க்கும் பொழுது அவ்வளவு நன்மைகளை அநுபவித்த அவன் பரலோக பாக்யத்தை இழந்து போன அந்த வேதனையான சம்பவம் நமக்கு நினைவு வருகிறது. நன்மையோ, தீமையோ எதுவாயிருந்தாலும், **"நினைவு"** என்பது வல்லமையான ஒன்றாக திகழ்கிறது. ஆரம்ப நாட்களில் நம்முடைய குடும்பங்களின் நிகழும் நினைவுத் தழும்புகள், நம்முடைய பிள்ளைகளின் வாழ்வை வடிவமைக்க வல்லமையுள்ளதாய் இருக்கிறது.

ஆகவே, உங்கள் பிள்ளைகள், குடும்பத்தைப் பற்றி எப்படிப்பட்ட நினைவுள்ளவர்களாக இருப்பார்கள் என்று பார்ப்போம்.

**நீங்கள் தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் மிகப்பெரிய விசுவாசம் வைத்திருந்தீர்கள் என்பதை உங்கள் பிள்ளைகள் நினைத்துப் பார்ப்பார்களா?**

பிள்ளைகள், முதன் முதலாக தேவன் மீதான நம்பிக்கையை. தங்கள் பெற்றோரிடம் இருந்துதான் தெரிந்து கொள்கிறார்கள். பிறகு வாழ்க்கையின் பல கட்டங்களில், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தங்களை பெலப்படுத்திக் கொண்டு, விசுவாசத்தில் உறுதியாய் இருக்கிறார்கள். (ரோமர். 10:17). பெற்றோர்கள் தேவனை விசுவாசியாமலும், அவரை தங்கள் வாழ்க்கையில் பிரதிபலித்து காட்டாமலும் இருப்பார்களானால், பிள்ளைகள் ஒருபோதும் அவைகளை கற்றுக் கொள்ள மாட்டார்கள். (நீதிமொழிகள். 22:6). ஞானி சாலமோன் தான் எழுதிய நீதி. 31ம் அதிகாரம் 1 முதல் 9 வசனங்களில் தன் தாயார் தனக்கு கற்றுக் கொடுத்தவைகளை பட்டியலிட்டுக் காட்டுகிறான். வாசித்துப் பாருங்கள். எபிரேயர் 11ம் அதிகாரத்தில் உள்ள விசுவாச வீரர்கள் பட்டியலின்படி நாம் நடந்தோம் என்று நம் பிள்ளைகள் நினைவுபடுத்திப் பார்ப்பார்களா?

**சபையில் உள்ள எல்லா பங்குகளிலும் நாம் விசுவாசத்துடன்**

**தவறாமல் கலந்து கொண்டோம் என்று நம் பிள்ளைகள் நம்மைப் பற்றி நினைத்துப் பார்ப்பார்களா?**

உங்கள் பிள்ளைகள் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய காரியம் இதைவிட வேறு எதுவும் இல்லை. நியாயமான காரணமில்லாமல் பெற்றோர் சபையின் காரியங்களில் கலந்து கொள்ளாமல் இருந்தால், அதை பிள்ளைகள் தெரிந்து கொள்வார்கள். நம் பிள்ளைகளை ஞாயிற்றுக் கிழமை ஆராதனையில் கலந்து கொள்ளாமல் வீட்டிலே இருந்து பள்ளிப் பாடங்களை படிக்கச் சொல்வோமானால், பெற்றோர்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள். ஒருவேளை, பெற்றோர்கள் **"ஞாயிற்றுக்கிழமை"** கிறிஸ்தவர்களாக (?) இருந்தால் அவர்கள் பிள்ளைகளும் அப்படித்தான் இருப்பார்கள். சொல்லப்போனால், அதைவிட பலவீனமாகவும், முழுவதும் தேவனை விட்டு விழுந்து போவதற்குமே ஏதுவாக அது அமையும். அவர்களுக்கு முன்பாக வைக்கப்படும் சிறந்த மாதிரியானது எல்லாவற்றைக் காட்டிலும், வல்லமை பொருந்திய ஆசானாக இருக்கிறது. அவர்களுக்கு முன் சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் விட அது பலமுள்ளதாக இருக்கிறது. வேதாகம வகுப்புகள், சபையின் பங்குகள் போன்ற காரியங்களில் நம் பிள்ளைகள் பெரியவர்களாகும்போது எந்த வகையான நினைவுகளை உடையவர்களாக இருப்பார்கள் என்று, பெற்றோர்களாகிய நாம் கரிசனையுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியமல்லவா?

**ஆவிக்குரிய சிந்தனை உடைய பெற்றோர்களாக நாம் இருந்தோம் என்று நம் பிள்ளைகள் நினைத்துப் பார்ப்பார்களா?**

ஆவிக்குரிய தன்மை என்பது, நாம் எதை முதன்மையானதாக எண்ணுகிறோமோ அதை மற்றவர்களிடம் எடுத்துரைப்பதேயாகும். பெற்றோர்களாகிய நாம் நம்முடைய அனைத்து செயல்களிலும், எல்லா தீர்மானித்தலிலும் ஆவிக்குரிய தன்மை பெற்றிருக்கிறோமா? என்று நம்முடைய பிள்ளைகள் கவனிப்பார்கள். இன்னும் சாப்பிடும் முன் ஜெபம், அன்றாடம் வேதம் வாசிப்பது, குடும்ப ஜெபம், போன்றவற்றில் நம்முடைய ஆவிக்குரிய நிலை என்ன? என்று நம் பிள்ளைகள் கவனிப்பார்கள். ஆவிக்குரிய பயிற்சிகளைக் காட்டிலும், உலக கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? என்று பிள்ளைகள் பார்ப்பார்கள். (எபே. 6;4). வாழ்க்கையில் நாம் கொடுக்கும் முதல் இடங்களைப் பற்றியதான நம்முடைய பிள்ளைகளின் நினைவு எவ்வாறு இருக்கும் (மத். 6:33)?

நீதி. 31:28-ல் உள்ளபடி பிள்ளைகள் எதிர்காலத்தில் பெரியவர்களாகி நம்மை பாக்கியவான்கள் என்று அழைப்பார்களா? இதைப் பற்றி நாம் இதுவரை எதுவும் செய்யாமல் காலம் வரட்டும் என்று தாமதித்துக் கொண்டிருப்பது எவ்வளவு மதியீனமான செயல்! சீக்கிரமாக அவர்கள் நம் வீட்டை

விட்டு வெளியே செல்லப் போகிறார்கள். நாம் கொடுத்த சில காரியங்கள்தான் அவர்கள் நினைவில் இருக்கும். அந்த சில நினைவுகளும் அவர்கள் அதற்கு நன்றியுள்ளவர்களாகவும் அவர்களுக்கு ஆறுதலாகவும், அவர்கள் வாழ்வின் எல்லாவற்றிற்கும் வழிகாட்டுதலாகவும் இருக்குமா?

ஆகவே, கிறிஸ்துவுக்குள் எனதருமை தாய்மார்களே! நம்முடைய நினைவுகளாக நம் பிள்ளைகளுக்கு எவைகளை விட்டுப் போக இருக்கிறோம். ஒரு விசுவாசமுள்ள நல்ல சந்ததியை உருவாக்கும் பொறுப்பை பெற்றோர்களாகிய நம் கையில் தேவன் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு பார்க்கும்பொழுது, பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை ஒரு விரோதிகளைப் போல் பார்க்கிறார்கள். குடும்பத்தை வெறுக்கிறார்கள். குடும்பத்தில் நேரத்தை செலவிடுவதை விட வெளியே நேரத்தை கழிக்க விரும்புகிறார்கள். புத்திமதி விசனமாயிருக்கிறது. இதனால் மனம் உடைந்த நிலையிலிருக்கும் பெற்றோர்கள், விசேஷமாக தாய்மார்கள் எத்தனை பேர்? இதற்கெல்லாம் காரணம், சரியான **முன்மாதிரி** இல்லாததே. ஐனிக்கேயாள் என்ற தாயாரை நாம் அறிவோம். விசுவாசமுள்ள தீமோத்தேயுவை உருவாக்கிய தாயாக அவள் வாழ்ந்தாள். அவளுடைய போதனையின் நினைவால் பிள்ளை வளர்ந்தான். இதுதான், அதன் இரகசியம். எனவே நாம் விசுவாசமுள்ளவர்களாய் வாழ்ந்து காட்டி, அவற்றின் நினைவுகளால் நம் பிள்ளைகள் வாழும்படி செய்வோம்.

சபையில் அசையாத விசுவாசமுள்ள சகோதரியாக, வேதாகமம் எதிர்பார்க்கிற உண்மையான, கீழ்ப்படிதலுள்ள மனைவியாக, அன்பையும், விசுவாசத்தையும் ஊட்டுகின்ற தாயாக நாம் ஜீவித்தால், சிறந்த நினைவுகளை நம் பிள்ளைகளுக்கு சொத்தாக சேர்த்து வைக்க முடியும். அப்படி ஜீவிக்க பரலோகத்தின் தேவன் உதவி செய்வாராக! ஆமென்!

**ரேச்சல் ராஜநாயகம்**

**The Voice of truth International**

## ஆனதோத் பட்டணம் பற்றி

வேலியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பட்டணம், இது பென்யமீன் கோத்திரத்து நிலப்பரப்பிலிருந்தது (யோசுவா 21:18) அபியத்தார், எரேமியா, அபியேசர், எகூ என்பவர்களின் சொந்த ஊர் (I இரா.2;26; எரேமி 1:1, 2 சாமு 23:27, 1 நாளா 11:28, 27:12, I நாளா 12:3) சனகெரிப் என்கிற அசீரிய அரசன் இப்பட்டணத்தைக் கைப்பற்றினான் (ஏசாயா 10:30), பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வந்த இஸ்ரவேலர்கள் இப்பட்டணத்தில் மீண்டும் குடியேறினார்கள் (நெகேமியா 11:32). எருசலேமிலிருந்து வடக்கே 5 கி.மீ. தூரத்தில் இது அமைந்திருக்கிறது.

# இறுதியில் மேன்மை பாராட்டும்



**ரா**மசேசை விட்டுக் கிளம்பிய அந்த நாள் யூத வரலாற்று ஏட்டிலே உன்னதமான இடத்தை பொறிக்கப் பெறக் காரணம் யாதெனில், கொடுமையை எதிர்த்து கொடுங்கோலை எதிர்த்து, அன்றுவரை குமுறிக்கிடந்த கூட்டம், "இப்படியும் வதைவதா" எனக் கேட்டால், சிரசை சரீரத்திலிருந்து பிரித்துவிடுவார் பகைவர் என்ற இழிநிலையிலே சிக்கிச் சிதைந்து நசுக்கப்பட்டு கிடந்த மக்கள், தேவ துணை கொண்ட மோசேயின் தலைமையில் நிமிர்ந்து நின்று, பத்து வாதையை தேவன் நடப்பித்ததால் பகை கொன்று, யாம் வென்றோம் என ஆர்த்தெழுந்த இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் கடந்து, காலம் உருண்டோடியதால் யோசுவாவின் தலைமையில் யோர்தானைக் கடந்து நினைவுக் கல் எடுத்த நிகழ்விலிருந்து "அன்பு", "ஜெபம்", "தியானம்", "பயபக்தி", "போதனை", என்ற கற்களை நாம் கடந்த காலங்களில் கவனித்தோம்.

பரம பிதாவை பாரில் வசிக்கும் எந்த மனிதனும் ஒரு காலமும் கண்டதில்லை என்பதை அறிவோம், அவரை குமாரன் தாமே நமக்கு வெளிப்படுத்தினார். அவர் இக்குவலயத்தில் நன்மை செய்து சுற்றித்திரிகையில் ஒரு விசை, "பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க்கற்றுக்கொள்ளுங்கள்" (மத். 9;13) என்று திருவாய் மொழிந்தார். வாலிபர்களாகிய நீங்கள், கரைகாணாக் கடல் போல் இரக்கத்தை தன்னகத்தே வைத்திருந்த இயேசு மொழிந்த இரக்கத்தின் கருத்தை அறிய வேண்டும் என்ற உயர் நோக்குடன் இம்முறை "இரக்கம்" என்னும் கல்லை நான் ஏந்தி நிற்கிறேன் ஏற்றுப் படித்திடுக.

## இரக்கம் என்னும் கல்

"**இரக்கம்**" என்ற பதத்திற்கு பக்குவமாய் பொருள் காண்போம் என்றால், அது பாவத்தில் புரளும் நாம் தகுதியான ஒன்றை தற்பரனிடமிருந்து பெற்றுக் கொள்ளாததேயாகும். உதாரணமென்று கண்டால் இருள் நீங்கி, பதத்தின் பொருள் புரியும் என நம்புகிறேன். உரோமையருக்கு எழுதின நிருபத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் அடியார், எல்லோரும் பாவம் புரிந்தோம் எனவும், குறைமதியால் தேவநீதியை மதியாமல் பாவம் செய்ததால், நமக்கு வெகுமதியாக கிடைப்பது மரணம் எனவும் அடிக்கோடிட்டு யாத்துக் கொடுத்திருக்கிறார். (3:23;6:23) பாவியாக நாம் இருக்கையில் மனம் வருந்தி பின் திருந்தியதால், தேவன் நமக்கு தண்டனைத் தரவேண்டிய தகுதி பெற்றிருந்தும் நம்மீது அன்பு கொண்டனைத்து மன்னிக்கும் பண்புக்குப் பெயர் தான் "**இரக்கம்**" என்பதாகும்.

சென்ற திங்கள் நாம் கண்ட "போதனை" எனும் கல் சுமக்க "இரக்கம்" எனும் கல் மிகவும் அவசியமாகும். செம்மையாக செப்பிடுவோமெனில், ஆத்துமாக்கள் நித்திய அழிவிற்கு தப்பவேண்டும் என இரக்க எண்ணம் கொள்வதின் வெளிப்பாடே "போதனை" என்பதை நீங்கள் அறிய இப்புவியில் வாழும் போது இறைமகன் இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த ஒன்றை என்னுடன் சேர்ந்து கற்றிடுங்கள். புதிய ஏற்பாட்டின் முதல் நூலாகிய மத்தேயு நற்செய்தி புத்தகத்தின், ஒன்பதாம் அதிகாரத்தின் இறுதியில் நமது ஆண்டவர் திரளான ஜனங்களை கண்டவுடன் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்து போனார்கள் என்று மனதுருகினார். (36). இதன் வெளிப்பாட்டையும் கண்டிடுக, சர்வத்தையும் சிருஷ்டித்த அவர் அத்தோடு நிறுத்தாமல், சீஷர்களிடம், காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டிற்கு சென்று, விண்ணரசு அருகில் உண்டென்று அறுதியிட்டு செப்பிடுங்கள் என தன் இரக்கத்திற்கு செயல் வடிவு தந்தார். இதைச் செய்யவே விண்ணகம் விடுத்து அவர் மண்ணகம் வந்தார்.

வீதிகளில் வந்தனங்கள் தங்களுக்கே உரித்தாக வேண்டும் என நினைத்த பரிசேயரிடம் பயமின்றி "மாயத்தை களைந்திடுவீர்" என கோபம் கொப்பளிக்க கோமகன் கூறுகையில், "....நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி. நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் **இரக்கத்தையும்** விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்...." (மத். 23;23) என்கிறார். தேவத்துவத்தின் பரிபூரணத்தையும் தனக்குள்ளே பெற்றிருந்த இயேசு பெருமான், இறைவனின் எண்ணத்தை தன்னகத்தே வைத்துக் கொள்ளாமல், இவ்வையகத்திற்கு வெளிப்படுத்தினார். ஒருவன் தன் மார்க்கத்தின் உயர்நிலையடைய வெறும் மார்க்கக் கடமைகள் மாத்திரமே போதா என்ற உயரிய பாடத்தை உன்னதர் உயர்த்திக் காட்டினார்.

வாலிபர்களே! உமிழ்நீரால், உலகத்தை காண முடியா ஊனத்தை ஊர் அறிய நீக்கிய உத்தமனின் முகத்தில் காரி உமிழ்ந்தபோதும் பொறுமையாக சகித்த இவர் கோபத்துடன் இதைச் சொல்ல காரணம் என்ன என்ற கேள்விக் குறி நம்மிடம் எழுவதுறுதி. நமதாண்டவர் காரணமில்லாமலா சினம் கொள்வார்? இல்லை காரணமறிய கவனமாய் படித்திடுங்கள். பழைய ஏற்பாட்டு புத்தகத்தை புரட்டிப் பார்க்கையில் இயேசுவுக்கு முன் கி.பி. 750ல் வாழ்ந்த தீர்க்கனாகிய ஓசியா தனது 4வது அத்தியாயத்தின் முதல் வாக்கியத்தில் கூறுவதைக் கவனியுங்கள், "....தேசத்துக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, **இரக்கமும் இல்லை**; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை.

ஓசியா தீர்க்கன் மூலம் மாத்திரமா இஸ்ரவேலை வழக்காட தேவன் அழைக்கிறார். இல்லை இல்லை, இவன் காலத்திலேயே வாழ்ந்த ஏசாயா தீர்க்கன் கூறுவதைப் பாருங்கள், "நன்மை செய்யப் படியுங்கள் நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும்,

விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்" என்கிறார். (ஏசா. 1;17). வாலிபர்களே! இவ்வசனத்தை நாம் "நன்மைசெய்யப் படியுங்கள், நியாயத்தைத் தேடுங்கள், பிறருக்கு (இரக்கம் செய்யுங்கள்) என்று சொன்னாலும் அதில் தவறில்லை என்று என்னோடு நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என நம்புகிறேன். இப்படி ஏசாயாவின் மூலம் கூறிய தேவன் அடுத்த வாக்கியத்தில், "வழக்காடுவோம் வாருங்கள் ...." (1;18) என்றழைக்கிறார்.

ஓசியா காலத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தில் 750 ஆண்டுகள் "இரக்கத்தை மறந்துவிட்ட" வழக்கொன்று இருக்கிறது. தேவனும் தீர்க்கதரிசிகள் மூலம் அவ்வப்போது எச்சரித்தும், 350 ஆண்டுகள் இஸ்ரவேலர்கள் ஆவிக்குரிய செவியை கொன்றுவிட்டனர், பின் 400 வருடம் அமைதியாயிருந்த தேவன், குமாரனைக் குவலயத்திற்கு அனுப்பி தன் அமைதி களைந்தார். இப்படி அவதரித்த இயேசு இவ்வுலகிலிருக்கும் போது, ஒரு சமயத்தில், நியாயசாஸ்திரி, நீதிமானாய் தன்னை நிலைநாட்ட நினைத்து எனக்குப் பிறன் யார் என பெருமையோடு அவரிடம் கேட்டான் என்பதை லூக்கா நமக்கு எழுதித் தந்திருக்கிறார். அவனுக்குப் பதில்தர உவமை ஒன்றை உதிர்த்தார் உன்னதத்தின் அருணோதயம். அவனுக்கு பதில் உரைத்த அந்த உவமையில் உள்ள மற்றொரு உட்கருத்தை கவனித்தோமானால், ஆலயத்தில் இறைப்பணி ஆற்றிய ஆசாரியன், லேவியன் ஆகியோரின் அலங்கோலத்தை நமதாண்டவர் அந்த சமாரியன் உவமையில் அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

கர்த்தரை நினைக்க வேண்டிய இளைஞர்களே! இயேசு பிரானின் கருத்தாழத்தை கருத்தாக உற்று நோக்கிடுவீர். இறைபணி செய்கிற நாம்

## அறிஞனின் அறியாமை



**ஹெ**ர்பெர்ட் ஸ்பென்சர் (**Herbert Spencer, 1820 - 1903**) என்ற பிரிட்டிஷ் தத்துவஞானி, தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் ஆராய்ச்சிக்கும், பரிசோதனைக்கும் செலவழித்துவிட்டு, இறுதியில் இவ்வாறு சொல்கிறார். விஞ்ஞானத்திற்கு ஐந்து அடிப்படைகள் உண்டு : Time (காலம்), Force (சக்தி), Action (செயல்), Space (ஆகாயம்), Matter (பொருள்). சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒருவர் எழுதி வைத்துள்ளதைத்தான் எதிரொலிக்கிறோம் என்பது அவருக்கு குறைவாகவே தெரிந்திருந்தது. எழுதின மனிதர் மோசே, அவர் எழுதினது ஆதியாகமம், வாசகம் இது தான் : ஆதியிலே (*காலம்*), தேவன் (*சக்தி*), வானத்தையும் (*ஆகாயம்*), பூமியையும் (*பொருள்*), சிருஷ்டித்தார் (*செயல்*) (ஆதி 1:1)

ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டிய மிகச் சிறந்த பாடமிது- ஆலயப்பணி புரிந்திட தான் அவன் சென்றான் என்றாலும், அழியும் ஆத்துமாவின் மேல் அக்கரை அற்ற ஆசாரியனின் அச்செயல் தேவனுக்கு விரோதமாய் மாறியது.

கொடியவரால் குத்திக் குற்றுயிராகக் கிடக்கும் அவனுக்குள் இருப்பது பரமன் தந்த ஜீவ ஆத்துமா என்பதை மறந்தே போனான். அது பிழைக்க வழி கொல்வோமானால் அது பரமபிதாவுக்கு செய்யும் பிரியமான பணி என்பதை மறந்து, வழி நடந்து போனான். இப்போது சொல்லுங்கள் "இதிலும் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" என்ற இறைசெய்தி இல்லாமலா இருக்கிறது. இத்தனை வாய்ப்புக் கிட்டியும் கொஞ்சமும் திருந்தாததால் தான் பரிசேயரைப் பாரபட்சமின்றி பரமமைந்தன் கோபித்துக் கண்டித்தார். ஆகவே, தேவன் இவ்வளவு முக்கியத்துவம் தந்த இரக்கத்தை நம்மிடம் நிரப்பப் பெற வேண்டுமென்பதில் புல்லளவும் ஐயமில்லை.

## தேவனும் - நீதிமான்களும் (நீதிமொழிகளில் ....)

a) அவர்களில் பிரியமாயி - ருக்கிறார் - 15:9

b) அவர்களுடைய ஜெபத்தைக் கேட்கிறார் - 15:29; 10:24

c) அவர்களுடைய தேவையை சந்திக்கிறார் - 10:3; 11:28; 13:25

d) அவர்களை சபிக்காமல் ஆசீர்வதிக்கிறார் - 3:33; 10:6; 11:31

எனக் கருமையான வாலிப உள்ளங்களே! இப்பூவுலகத் தோட்டத்தில் ஒரு முறை மலர்ந்து பின்பு உதிர்ந்து நியாயத்தீர்ப்பு அடைவது மனுக்குலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். (எபி. 9;27). யாக்கோபு தனது நிருப்பத்தில் மனித குலம் சந்திக்க வேண்டிய தீர்ப்பை அணுகவேண்டிய விதம் குறித்து எழுதுகையில், "....**இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்**" என்கிறார். அன்று தம் சீடர்க்கெல்லாம் அறிவுரை கூற எண்ணிய இயேசு குன்றின்மேல் ஏறி மாரிபோல் மொழிந்த மலைப் பொழிவில், "**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்**" (மத். 5;7) என்று பிரசங்கித்ததும் இக்கருத்துதான். ஆகவே, எனக்கன்பான வாலிப நெஞ்சங்களே! இறுதி நாளில் இறைமகன் முன் தீர்ப்படைய நாம் நிற்கையில் இறுகிய முகத்துடன் நமக்கவர் காணப்படாமலிருக்க, இரக்கம் பல பிறருக்குப் புரிவோம். அன்பால் இளகிய அவர்தம் இன் முகம் காண்போம்! தேவாசீர்வாதம் பெறுவோம்! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# எஸ்தர் ஒரு கண்ணோட்டம்

**காலம் : சுமார் கி.மு. 450 - 435**

**ஆசிரியர் : எழுதியது யார் என்று திட்டமாக தெரியவில்லை.**

## இந்நூல் பற்றி

a) எஸ்தர் என்பது ஒரு பாரசீகப் பெயர், இதற்கு கிழகின் நட்சத்திரம் என்ற பொருள் உண்டு.

b) "பூரிம்" பண்டிகை இப்புத்தகத்திலே தான் இடம் பெற்றிருக்கிறது. "பூரிம்" என்கிற வார்த்தை "பூரு", என்கிற பதத்தில் இருந்து தான் வந்தது. இது பாரசீக மொழியில் "சீட்டு போடுதல்" என்ற பொருளைத் தரும்.

c) இந்நூலில் நடந்த நிகழ்வுகள், அகாஸ்வேரு அரசனின் 486-465 கி.மு. காலத்தில் நடந்தது.

d) இந்நிகழ்வுகள் எஸ்றா புத்தகத்தின் ஆறு, ஏழு ஆகிய அதிகாரத்தின் இடையே உள்ள 60 வருட இடைவெளியில் நடந்திருக்கலாம்.

e) யூதர்கள் இப்புத்தகத்தை, மகா ஜெப ஆலயத்தின் மனுஷர்கள் எழுதினார்கள் என நம்புகிறார்கள், ஜோசிபஸ் என்கிற வரலாற்று ஆசிரியர் இப்புத்தகத்தை மொர்தெகாய் எழுதியிருக்கலாம் என்கிறார்.

e) இதன் நிகழ்வுகள் எல்லாம் புறதேசத்திலே நடந்திருக்கிறது.

## இந்நூலின் செய்தி

1) வாக்குத்தத்த தேசத்திலிருந்து வெகு தூரத்தில் தமது ஜனங்களிருந்தாலும் அவர்கள், தேவனுடைய கரத்தில்தான் இருக்கிறார்கள்.


2) யோசேப்பு, எஸ்தர் ஆகியோரின் வாழ்க்கை, தேவனுடைய முன் அறிதலுக்கு சிறப்பான உதாரணமாக இருக்கிறது.

3) தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது



# எறும்புகள் : தேவனுடைய அதிசய சிருஷ்டிப்பு

எனதருமை சிறு தம்பி, தங்கைகளே, ஒவ்வொரு மாதமும் வெளி வரும் சிறுவர்பகுதி உங்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும் என நம்புகிறேன். நாம் இம்மாதம், சிறு எறும்பானது, சிறு பிள்ளைகளாகிய நமக்கு என்ன பாடம் கற்றுத் தருகிறது என்று பார்ப்போம்.



உலகிலேயே மிகவும் அபூர்வமானதொரு பூச்சி வகை எதுவென்று கேட்டால், அது மிகச்சிறிய எறும்பு தான். எறும்பினத்தில் ஏறக்குறைய 10,000 வகைகள் உள்ளன. சில வகை எறும்புகள் நிலத்தடி குகைப் பாதைகளிலும், சில வகை எறும்புகள் வெறும் மண்ணையும், குப்பையையும் கொண்டு புற்றமைத்தும், சில வகை எறும்புகள் உளுத்துப்போன மரங்களிலும் வாழுகின்றன. சில எறும்புகள் "தோழமை பூச்சிகள்" என்றழைக்கப்படுகின்றன. ஏனென்றால், அவைகள் ஒரு கூட்டமாகவும், மற்ற எறும்புகளுக்கு எல்லாவிதத்திலும் உதவியாகவும் இருப்பதால் தான் இச்சிறு எறும்புகளுக்கு இப்பெயர் வந்தது.

நமது தேவன் அவைகளை படைக்கும் போதே ஒரு தனித் திறனோடு படைத்திருக்கிறார். உதாரணமாக, ஒரு வகை எறும்பை நாம் "சிறுகுடை எறும்பு" என்று அழைக்கிறோம். அவைகள் ஒரு விவசாயியை போல செயல்படுகின்றன. எப்படியெனில் அவைகள் ஒரு காளான் தோட்டத்தையே புதிதாக எழுப்புகின்றன. அவைகள் தங்கள் சொந்த காளான் தோட்டத்தை நடவும், உரமிடவும், களை எடுக்கவும் ஏன் அறுவடையும் செய்கிறது. மற்றொரு வகை எறும்பு, பால் பண்ணைக்காரர் போல் செயல்படுகின்றன. அவைகள் தன்னோடு, "சிறு பசுக்கள்" என்றழைக்கப்படும் ஹாப்பிட்ஸ்களை தன்னுடைய கூட்டுக்குள் வைத்து பராமரிக்கும். வசந்த காலத்தில் இந்த ஹாப்பிட்ஸ்களை செடிகளில் விட்டுவிடும். அங்கே அது தனக்காக உணவுகளை உட்கொள்ளும். எறும்புகள் ஹாட்பிட்ஸ்களுடனே உராயும் போது அதின் உடம்பிலிருந்து இனிப்பானதொரு திரவம் வெளிவரும். அதை எறும்புகள் உட்கொள்ளும்.

எறும்புகள் அதிசயிக்கத்தக்க வழி காணும் திறனை உடையவை. எறும்புகள் தங்கள் இறுப்பிடத்திலிருந்து வெகு தூரம் சென்றாலும் தான் வசிக்கும் இடத்துக்கு அவைகள் திரும்ப வர முடியும். எறும்புகள் சூரிய, சந்திரன் ஒளிகளைக் கொண்டு தடங்களில் வழிகளை தெரிந்து கொள்கிறது என்று சில விஞ்ஞான சோதனைகள் கூறுகின்றன.

வேதாகம புத்தகங்களில் ஒன்றான நீதிமொழிகளில் சாலமோன், (இஸ்ரவேலின் மகாராஜனும் ஞானியுமாய் இருந்தவன்) எறும்புகள் "அறுப்பு காலத்தில் தனக்கு தானியத்தை சேர்த்து வைக்கும்" என்று கூறுகிறார். வெகு காலமாக இது வேதாகமத்தில் உள்ள ஒரு பிழை என்றே கருதப்பட்டது. ஆனால் இப்பொழுதோ, சில எறும்புகள் தங்கள் உணவுகளை தாங்களே அறுவடை செய்கின்றன என்று தெரிகிறது. செடிகளில் இருந்து விழும் விதைகளைத் துண்டுகளாக்கி தன் நிலத்தடி இருப்பிடங்களில் சேர்த்து வைக்கின்றன.

எறும்புகளின் தன்மைகளை நாம் கவனித்தால், அவைகளிடமிருந்து நாம் நிறைய கற்றுக் கொள்ள முடியுமென்று தெரிகிறது. **இவைகளுக்குத் தனித் திறன் உண்டு. தங்கள் தேவைகளைச் சந்திக்க எறும்புகள் கடினமாக உழைக்கிறது. அனுதின வாழ்க்கையில், மற்ற எறும்புகளுக்கு அதிகமாக உதவுகிறது.** இந்த அரிய தன்மைகள், தேவனிடத்திலிருந்து தான் கிடைத்திருக்க வேண்டும். ஆகவே, இந்த சிருஷ்டிகளுக்காகவும், அவை தரும் பாடங்களுக்காகவும் சிறு பிள்ளைகளாகிய நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

தமிழில் : **R.A.R. Nayagam**
(எபில் ரோஜர் நாயகம்)

## தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகள்

பிரச்சினைகள் நம்முடைய வாழ்வில் இருப்பது தவறல்ல. ஓர் அறிஞர் கூறும்போது, "பிரச்சினை இல்லாதவர்களுக்கென்று ஒரு சிறப்பான இடம் ஒதுக்கப்பபட்டிருக்கிறது - அந்த இடத்திற்கு கல்லறை என்று பெயர்" என்றார். தேவன், ஒருபோதும் உறைந்துபோகும் மையுடைய பேனாவால் எழுதுவதில்லை; தழுதழுக்கும் அல்லது தவறிப்பேசும் நாவுடன் அவர் ஒருபோதும் பேசுவதில்லை; ஒருபோதும் தளராத கைகளால் தான் செயல்படுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பிரச்சினை இருக்கத்தான் செய்யும். பவுல், ஒவ்வொரு காரியத்திலும் அல்லது திசையிலும் பிரச்சினை உடைய சிறந்த எடுத்துக்காட்டாக நமக்கு இருக்கிறார் (I கொரி 11:13-28). கள்ள போதகர்களால் மாத்திரம் அவருக்கு பிரச்சினை வரவில்லை, அவருக்கு கள்ள சகோதரர்களினாலும் பிரச்சினை வந்தது. உண்மையுள்ள கிறிஸ்தவனாக வாழ விரும்புபவனுக்கு பவுல் கூறுகிறார், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (II தீமோ 3:12) என்று

நாம் துன்பத்தை நினைத்து கலக்கமடையும் குணமுடையவர்களாக இராமல், கிறிஸ்தவர்களாக இருப்பதால் நாம் சிலுவைகளை சுமக்க வேண்டும் என்ற உண்மை உணர்ந்து, சிலுவை சுமப்பது வேதனைதரும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்(மத்தேயு 16:24). பிரச்சினைகள் எழும்பும்போது, இவர்கள் பேதுருவின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும், "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்." (I பேதுரு.5:7)

# வெளிப்படுத்தின விசேஷம்

அதி. 16:12–21



**வெ**ளிப்படுத்தல் 16:12–16 வசனப்பகுதியானது, பிரபலமானதும், அநேகரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதுமான அர்மகெதோன் யுத்தம் பற்றிச் சொல்லுகிறது. இந்த யுத்தமானது, பூமியின் மீது ஊற்றப்பட்ட தேவனுடைய கோப கலசத்தின், கடைசி ஏழு வாதைகளுள், ஆறாவதின் உச்சகட்டமாக இந்த அதிகாரத்தில் உள்ளது. 12ம் வசனத்தில், "ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான். அப்பொழுது சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் "தண்ணீர் வற்றிப்போயிற்று" என்றுள்ளது. ஐபிராத் நதியின் தண்ணீர் வற்றிப் போவதிலிருந்து வாதை ஆரம்பமாகிறது. ரோம சாம்ராஜ்யத்தின் கிழக்கு எல்லைப் பகுதியில் ஐபிராத் இடம் பெற்றிருந்தது. "கிழக்கிலிருந்து வரும் ராஜாக்களுக்கு" வழியை ஆயத்தமாக்கும்படி நதியின் தண்ணீர் வற்றிப்போனது முக்கியமானது. பழங்கால ரோமின் நாட்களில், ஐபிராத், டைக்ரிஸ், நதிகளுக்கு அப்பால் கிழக்கில் இன்றைய ஈரான் இருக்கும் பகுதியில், இருந்தது. பர்தியா ராஜ்யம். மேதியா பெர்சியா மற்றும் கிரேக்க சாம்ராஜ்யங்களால் ஆளுகை செய்யப்பட்டதற்குப் பிறகு, பர்தியா கி.மு. 250ல் சுதந்திர ராஜ்யமாயிற்று. இந்தப் பர்தியா, ரோமர்களால் ஒருபோதும் மேற்கொள்ளப்படவில்லை. இது ரோமிற்கு எதிரான, ஒரு வல்லமையான ராஜ்யமாக வளர்ந்தது. ரோமர்களும், பர்தியர்களும் நூற்றாண்டுகளாக 400 யுத்தங்களை நடப்பித்தார்கள். ஆறாம் தூதனாலே ஊற்றப்பட்ட வாதையானது, கிழக்கிலிருந்து ஐபிராத்து நதியின் வழியாக, ரோம எல்லைக்குள் வருவதற்கான வழியை ஆயத்தப்படுத்துகிறது.

இந்த இடத்தில், "வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து, தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வருவதை" (16:13) யோவான் கண்டான். வலு சர்ப்பமானது சாத்தான் என்பதையும், (வெளி 12:9) இது இயேசு கிறிஸ்துவின் சாட்சியை உடையவர்களிடத்திலும், தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்திலும் யுத்தம் செய்யப்போயிற்று (12:17) என்பதையும், நினைவுக்குக் கொண்டு வாருங்கள். இந்த மிருகமானது,

சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்ததும், வலுசர்ப்பத்தினாலே, தன்னுடைய பலம், சிங்காசனம், மிகுந்த அதிகாரம் ஆகியவைகள் கொடுக்கப்பட்டதுமாயும் (13:1-2), பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவைகளைக் கொன்றதுமாயிருக்கிறது (13:17) பூமியிலிருந்து எழும்பி வந்த மிருகமே கள்ளத்தீர்க்கதரிசி (வெளி 13:11) அது, உலகம் முழுவதும், மிருகத்தின் சொரூபத்தை உண்டாக்கும்படியும், வணங்கும்படியும் செய்து அதன் முத்திரையையும், அதன் நாமத்தின் இலக்கத்தையும், தரித்துக்கொள்ளும்படி செய்தது. (வெளி 13:12-18). இங்கே, வெளி 16:13ல், சாத்தானுடைய தீய நோக்கங்களை நிறைவேற்றும்படியாய், மிருகத்தோடும், கள்ளத்தீர்க்கதரிசியோடும் சேர்ந்து பிசாசு கிரியை நடப்பிக்கிறதை நாம் காண்கிறோம். இவைகள் ஒவ்வொன்றின் வாயிலிருந்தும், தவளைகளுக்கு ஒப்பான அசுத்த ஆவிகள் புறப்பட்டு வந்தது, இது, மோசேயின் நாட்களில், தேவன் எகிப்தின் மீது கொண்டு வந்த இரண்டாம் வாதையை நினைவுபடுத்துகிறது. (யாத் 8:1-15) வெளி 16:14, தவளைகளுக்கொப்பாக இந்த மூன்று அசுத்த ஆவிகளும், "அற்புதங்களைச் செய்கிற பிசாசின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்கு புறப்பட்டுப் போகிறது" என்று சொல்கிறது. ஜனங்களை வஞ்சிக்கும்படி கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான அற்புதங்களைச் செய்ததுபோல (வெளி 13:13-14), வெளி 16:14ல் உள்ள பிசாசுகளும் அற்புதங்களைச் செய்கிறது. இவைகள் உண்மையான அற்புதங்களாக இருக்க முடியாது. ஏனெனில், உண்மையான அற்புதங்களைச் செய்யும்படியான வல்லமை தேவனிடத்திலிருந்துதான் வரமுடியும். தேவன் தன்னுடைய வல்லமையை சாத்தானுக்கும், பிசாசுக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் சாட்சியாகக் கொடுக்கமாட்டார். சாத்தானுடைய ஏவலாட்கள் "பொய்யான அற்புதங்களைச் செய்வார்கள் (II தெச : 2:9-10). இந்தப் பிசாசுகள்,"சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளின் யுத்தம்" என்றழைக்கப்படுகின்ற மகா யுத்தத்திற்கு அவர்களைக் கூட்டிச் சேர்க்கும்படியாய் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களிடம் செல்லுகிறது.

(வெளி 16:15), கர்த்தரிடத்திலிருந்து வரும் ஒரு எச்சரிப்பு பற்றிச் சொல்கிறது. அவர் "இதோ, திருடனைப் போல் வருகிறேன்" என்று சொல்லுகிறார் இந்தப் பகுதியைக் குறித்து, அநேகர் தவறாகப் புரிந்து, விசுவாசிப்பதைப் போல, வரப்போகும் யுத்தத்தை சொல்லர்த்த ரீதியிலான யுத்தமாகப் புரிந்து கொள்ளக்கூடாதென்று தெளிவாகிறது. இன்னும், இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் உலகத்தின் முடிவுக்கு முன்னோடியானதுமல்ல. இரவிலே, திருடனைப் போல கிறிஸ்து வருவார் (மத்: 24:42-44; லூக் 12:39-40; 1தெச 5:1-6; II பேது 3:10-14; வெளி : 3:3). ஒரு திருடன் தன்னுடைய வருகையை முன்கூட்டியே

அறிவிப்பதுமில்லை, அவன் வருகைக்கானதொரு அடையாளத்தை கொடுப்பதுமில்லை. வெளி 16-ம் அதிகாரத்தின் ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில், இதைத் தெளிவாகக் கூறுகிறார். கிறிஸ்துவின் வருகை, ஒரு திருடன் வருகையைப் போலிருக்குமாதலால், அவருடைய வருகைக்கு முன்பாக, அர்மேகதோன் என்னும் இடத்தில், சொல்லர்த்த ரீதியிலான ஒரு யுத்தம் இருக்கப்போவதில்லையென்று நமக்குத் தெரியும். அவருடைய வருகைக்கு எச்சரிக்கும்படியாக அர்மகெதோன் யுத்தம் என்றெல்லாம் எந்த அடையாளமும் இருக்காது. (மத் : 24:36-51).

வசனம் பதினைந்து, வெளிப்படுத்தல் நூலின் மூன்றாவது ஆசீர்வாதத்தை அறிவிக்கிறது, "தன்மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்". தங்கள் வஸ்திரங்களைக் கறைபடுத்தாதவர்கள், வெண் வஸ்திரந்தரிக்கப்பட்டு கிறிஸ்துவுடனே கூட நடப்பார்கள். (வெளி 3:4-5) லவோதிக்கேயா சபையார் ஆவிக்குரிய ரீதியில், நிர்ப்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணியுமாயிருந்தார்கள். ஆகவே, இயேசு அவர்கள் உடுத்திக் கொள்வதற்குத் தன்னிடத்தில், வெண்வஸ்திரங்களை வாங்கிக் கொள்ளும்படிக்கு ஆலோசனை சொல்லுகிறார் (3:17-18). உண்மையுள்ள பரிசுத்தவான்கள், வெள்ளை அங்கிகள் கொடுக்கப்படுவார்கள். (6:9-11) ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தாலே அவர்கள் அங்கிகள் வெள்ளையாக்கப்பட்டிருக்கிறது (7:9-17). இந்த சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம், பரிசுத்தவான்களின் நீதியாயிருக்கிறது. (19:7-8,14) நீதியின் வஸ்திரம் தரிக்கப்பட்டு, ஆயத்தமுள்ளவர்களாய்க் கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருப்பது, கிறிஸ்தவர்களுக்கு மிக அவசியமானது. நீதியான கிரியைகளை நடப்பிப்பதன் மூலம் இதைச் சாத்தியமாக்கலாம். (I யோ : 3:7) நீதியான கிரியையென்பது தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதாகும். (சங் 119:172) தான் வரும்பொழுது, அவருடைய சித்தத்தின்படி செய்கின்ற உண்மையுள்ள ஊழியக்காரர்களாகக் காணப்படுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று இயேசு சொல்லுகிறார். மத் : 24:45-47 வெளி 16:15லும் அதே ஆசீர்வாதம் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. மத் : 24:48-51 வசனப்பகுதி, கிறிஸ்து வரும்போது ஆயத்தமில்லாதிருப்பவர்களுக்கான எச்சரிப்பாக உள்ளதுபோல், வெளி : 16:15 நாம் நிர்வாணமாய் நடந்து, மானம் காணப்படத்தக்கதாக நடக்கக் கூடாதென்று எச்சரிக்கிறது.

வசனம் 16ல், "அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான் என்றுள்ளது "அவன்" என்பது கர்த்தரைக் குறிக்கிறதாக இருக்கும் (வசனம் 14, 15 காண்க)

எல்லா வாதைகளும் தேவனுடைய கோபத்தைக் கொண்டிருப்பதாலும், சாத்தான், பிசாசு, துன்மார்க்கர் போன்றோருக்கு தேவனுடைய திட்டத்தில் அவரவர்களுக்குரிய பங்கிருந்தாலும், அவைகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டபடியால், இப்படிச் சொல்வது அர்த்தமுள்ளதாயிருக்கிறது. எபிரேய மொழியில் "அர்" என்பதற்கு "ஒருமலை அல்லது மலைத்தொடர்" என்று பொருள். மெகிதோ என்பது இஸ்ரவேலில் உள்ள ஒரு இடத்தின் பெயர் அர்மகெதோன் என்பதின் நேரடிப் பொருள், மெகிதோவின் மலை என்பது. அந்த இடத்தில்தான் கிழக்கத்தி ராஜாக்களும், உலகத்தின் ஏனைய ராஜாக்களும், யுத்தத்திற்காகக் கூடுவார்கள். வசனங்கள் 12-16-ல் பல அடையாளங்கள் உபயோகப்படுத்தப்படுகிறது. இது உருவக ரீதியிலான ஒரு யுத்தத்திற்கு ஆயத்தப்படுவதை விளக்குகிறதென்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. சாத்தான் சொல்லர்த்த ரீதியிலான வலுசர்ப்பம் அல்ல. இன்னும், சொல்லர்த்த முறையிலான மிருகமோ, இரண்டாவது மிருகமோ (கள்ளத்தீர்க்கதரிசி) இல்லை. 13-ம் வசனத்தில், தவளைகள் வாயிலிருந்து புறப்பட்டு வந்தன என்று உருவக முறையில், சொல்லப்படுவதைப்போல்தான் வலுசர்ப்பமும், இரண்டு மிருகங்களும் சொல்லப்பட்டுள்ளது. அர்மகெதோன் யுத்தம் சொல்லர்த்த ரீதியிலானது, அதாவது, உண்மையானது என்று வலியுறுத்துபவர்கள், இந்த வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும் போது, முழுமையாக முரண்படுகிறார்கள், அவர்கள், வலுசர்ப்பம், இரண்டு மிருகம், தவளை போன்றவற்றை சொல்லர்த்த முறையிலானவை என்று நம்புவதில்லை. இன்னும் ஐபிராத்து நதி, இதே முறையில் வற்றிப்போகும் என்று நம்புவதில்லை. இருப்பினும் அர்மகெதோன் யுத்தம் மாத்திரம் நிஜமானது என்று முடிவு செய்கிறார்கள்! வெளிப்படுத்தல் நூலைப் படிக்கும்போது, உருவக முறையில் சொல்லப்பட்டிருப்பதற்கு சொல்லர்த்த ரீதியில் பொருள் கொள்வது, பொதுவாகவே பெரும்பாலோர் செய்கின்ற தவறுதான். அவைகளில் இது குறிப்பான ஒன்று.

அர்மகெதோன் யுத்தம் சொல்லர்த்த ரீதியில் இல்லையென்பது, வெளிப்படையாகத் தெரியுமானால், அடுத்து வரும் கேள்வி, அப்படியானால், அர்மகெதோன் யுத்தம் என்பது என்ன? என்பது. வெளிப்படுத்தல் எழுதப்பட்ட காலக்கட்டத்தில் ஐபிராத்து நதிக்கு அப்புறத்தில் இருந்த, கிழக்கத்திய பார்த்திய ராஜாக்கள் யுத்தத்திற்கு வருவது, இப்படி உருவக ரீதியில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தல் 8ம் அதிகாரத்திலுள்ள, ஏழாம் முத்திரையின் முதல் நான்கு எக்காளங்கள் ஊதும்போது, நடந்தவற்றிற்கும் வெளிப்படுத்துல் 16-ம் அதிகாரத்தின் முதல் ஐந்து வாதைகளுக்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பதுபோல, வரப்போகிற அர்மகெதோன் யுத்தம் பற்றிய விவரிப்பானது, வெளிப்படுத்தல் 9-ம் அதிகாரத்தில், ஐந்தாம், ஆறாம் எக்காளங்கள் ஊதும்போது, நடந்த முதல் இரண்டு ஆபத்துகளுக்கு இணையாக

உள்ளது. இங்கே,16-ம் அதிகாரத்தில், உலகமனைத்திலுமுள்ள ராஜாக்கள், இந்த உருவக யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். யுத்தகளமாகிய மெகிதோ மலை கூட பொருத்தமான அடையாளமாயிருக்கிறது. மெகிதோ, நியாயாதிபதிகள் 4-ம் அதிகாரத்தின்படி பாராக்கின் தலைமையின் கீழாகவும், நியாயாதிபதிகள் 7-ம் அதிகாரத்தின்படி கிதியோனின் தலைமையின் கீழாகவும், இஸ்ரவேலுக்குக் கிடைத்த மகத்தான வெற்றிக்குரிய இடமாக உள்ளது. அந்த இரண்டு சம்பவங்களிலும், தேவனுடைய ஜனங்கள் குறைவானவர்களாக இருந்தாலும், தன்னுடைய ஜனங்களை ஒடுக்கின துன்மார்க்கரை, தேவன் அழித்துப்போட்டு அவர் வெற்றி கொடுத்தார்.

அர்மகெதோன் யுத்தம் இதைப்போன்றதுதான். இந்த யுத்தம், தேவன் துன்மார்க்கர் மீது ஊற்றுகின்ற கோபத்தின் ஒரு பங்காக இருக்கிறது. அந்நாளில் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் அவருடைய கோபத்திற்கு தப்பி, ஜெயங்கொள்ளுவார்கள். இங்கே இந்த யுத்தமானது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னேற்பாடான யுத்தமாக செய்யப்படவில்லையென்பதை, கவனியுங்கள். உண்மையில், இந்த யுத்தம், இந்த இடத்தில் நடத்தப்படவில்லை. அதற்காக ஆயத்தம் பண்ணப்பட்டது. கிறிஸ்துவின் வருகை வசனம் 15-ல் விவரிக்கப்பட்டுள்ளது. அர்மகெதோனில் கூட்டிச் சேர்ந்தது 16-ல் உள்ளது பிறகு, 17-முதல் 21 வரையுள்ள பகுதி, முடிவிலே துன்மார்க்கர் அழிக்கப்படுவதைப் பற்றி விவரிக்கிறது. இது வெளி 19:11-21 பகுதியில் நடத்தப்பட்டுள்ள, மகத்தான யுத்தத்திற்குக் கிட்டத்தட்ட இணையாக உள்ளது. அங்கே கிறிஸ்துவானவர் வந்து தன்னுடைய எல்லா சத்துருக்களின் மீதும் இறுதியாக ஜெயங்கொள்வதோடு, அச்சத்துருக்களை, நித்திய தண்டனைக்கும் அனுப்புகிறார். கிறிஸ்துவின் வருகையின்போது, துன்மார்க்கர் மீதான, அவருடைய கோபக்கனல் நிறைந்த பழிவங்கலை குறிப்பதாக, இங்கே அர்மகெதோன் யுத்தம் உள்ளது. அப்பொழுது, அவருடைய உண்மையுள்ள சீடர்கள், உயிர்ப்பிக்கப்பட்டு, முடிவான ஜெயத்தையும், பரலோகத்தில் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்வார்கள். (IIதெச1:7-10ஐயும் பார்க்கவும்). ஆறாம் வாதையானது, நீதிமான்கள் ஜெயம் பெறும்போது, துன்மார்க்கர், நித்திய ஆக்கினையில் பங்கடைவர் என்பதைத் திட்டமாக விவரிக்கிறது.

வசனம் 17, "ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது, பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து "ஆயிற்று" என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது" என்று கூறுகிறது. ஏழு என்பது முழுமையான எண். தேவனுடைய கோபத்தால் நிறைந்த ஏழு கலசங்கள், தேவனுடைய கோபம் முழுமையாக ஊற்றப்படுவதையும், துன்மார்க்கர் மீதான முழுமையான நியாயத்தீர்ப்பையும் குறிக்கும். உலகத்தின் முடிவின போதும், நித்திய நியாயத்தீர்ப்பின்போதும்தான், தேவனுடைய கோபம் முழுமையாக

ஊற்றப்படுகிறதென்பது பொருத்தமாக இருக்கும். ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றிய போது, "ஆயிற்று" என்ற "பெருஞ்சத்தம்" உண்டாயிற்று. வசனம் 18-ல் "சத்தங்களும் இடிமுழக்கங்களும், மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின் மேல், மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி உண்டானதில்லை" என்றுள்ளது. இது வெளிப்படுத்தல் நூலில் முதன்முதலாக, தேவனுடைய கோபாக்கினையின் மகாநாளைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள வெளி 6:12-17 வசனப்பகுதியை நினைப்பூட்டுகிறது. இதே போன்று, உலகத்தின் முடிவு மற்றும் இறுதி நியாயத்தீர்ப்பைப் பற்றிய விவரிப்பை வெளி 11:14-19-ல் காணலாம். அங்கே, ஏழாவதும், இறுதியுமான எக்காளம் ஊதப்பட்டபோது, மூன்றாவதும், இறுதியுமான ஆபத்து வந்தது. உலகத்தின் முடிவு வெளி:14:18-20, 19:11-21, மற்றும் 21:22 அதிகாரங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. இப்படிச் சொல்லியிருப்பது, இந்நூலில், விஷயங்கள் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறதென்பதற்குச் சரியான விளக்கமாயிருக்கிறது.

பதினெட்டாம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள சத்தங்களும், இடி முழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சிகளும், 19-ம் வசனத்தில் "மகாநகரம்" மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டதற்கு இட்டுச் செல்கிறது. இன்னும் இவ்வசனத்தில், "புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது" என்றுள்ளது. பாபிலோனின் வீழ்ச்சியும், அவருடைய நித்திய ஆக்கினையும், வெளி 14:8ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளதைப் பார்த்தோம். பழைய ஏற்பாட்டிலுள்ள நிஜமான பாபிலோன், உலகிலுள்ள நாடுகள் தேவனுடைய உக்கிரத்தின், மதுபானத்தின் பாத்திரத்தைக் குடிக்கக் கொடுக்கும்படியாக உபயோகப்படுத்தப்பட்டதென்றும் (எரே:25;15-19). பிறகு, அதே பாத்திரத்தில் பாபிலோனும் பருகியதென்றும் (எரே:25:12-14, 26-29) உள்ளது. பாபிலோன் வெளிப்படுத்தலில், துன்மார்க்கத்திற்கும் தேவனுடைய உக்கிர கோபத்தின் பாத்திரமாகிய மதுவைக் குடித்ததுபோல, உருவக பாபிலோனும், தேவனுடைய உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தில் குடிக்கும். உலகத்தின் முடிவிலே, நித்திய நியாயத்தீர்ப்பை இது நோக்கிக் கொண்டிருக்கிறதென்ற உண்மை, 16:20-21 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது," தீவுகள் யாவும் அகன்று போயின; பர்வதங்கள் காணப்படாமற் போயின. தாலந்து நிறையான பெரிய கல்மழையும், வானத்திலிருந்து மனுஷர் மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடிதாயிருந்தது". துன்மார்க்கர் அனைவரும், தேவனுடைய கோபத்தில் பங்குபெற்று, நித்திய காலமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்ற போதனை, வெளிப்படுத்தலில் மிகத் தெளிவாக உள்ளது.

வெளி 12-16 அதிகாரங்கள் நமக்கு, முக்கியமான பாடங்களைப் போதிக்கிறது. அவை, நமக்கு ஆறுதலைத் தர வேண்டும். சாத்தான் நம்மைத் தாக்கி, நம்முடைய ஆத்துமாக்களை அழிக்க முற்படுவான் என்பது உண்மை. (அதி.12-13) நம் மீதான, அவனுடைய தாக்குதலாலே, நாம் பல துன்பங்களையும், பாடுகளையும், ஏன் மரணத்தையும் சந்திக்க நேரிடலாம் என்பது உண்மை (அதி.13) ஆனால் நாம் சாத்தானை எதிர்த்து நின்று, அவனுடைய சோதனைகளை மேற்கொள்ளும் நமது முயற்சியில், ஒருவேளை மரிக்க நேர்ந்தாலும், நாம் தேவனோடும் ஆட்டுக்குட்டியானவரோடும், பரிசுத்த தூதர்களோடும், எல்லா மீட்கப்பட்டவர்களோடும் இருக்கும்படியாய், பரலோகத்தில் நித்திய காலத்திற்கு பலனளிக்கப்படுவோம் (அதி 14-15). உபத்திரவங்களை சந்தித்துக் கொண்டிருக்கிற கிறிஸ்தவர்களுக்கு, உற்சாகமூட்டக்கூடிய செய்தி வேறெதுவாக இருக்கும்? அதே நேரத்தில் சாத்தானின் பலவித சோதனைகளுக்குப் பலியாகிறவர்களும், மனந்திரும்பாதவர்களும், தேவனுடைய பயங்கரமான கோபத்திற்கு உள்ளாகி, நித்திய ஆக்கினையில் பங்கடைய வேண்டுமென்பதையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது (அதி 14-16).

**JON MACON** **EZSR**

# சரி, சந்தோஷப்படுங்களேன்

அருமையான நண்பர்களே, வேதாகமத்தின் ஒவ்வொரு வசனமும் நமக்கு தேவைப்படுகிறது. நம்மை கண்டித்துத், திருத்துகிற வசனங்களும் நமக்குத் தேவை. அத்துடன் நம்மை ஊக்கப்படுத்தி உற்சாகமூட்டும் வசனங்களும் நமக்குத் தேவை. சிலர் கிறிஸ்துவை பின்பற்றுவதால் தங்களுக்கு ஏற்படும் சந்தோஷம் பற்றி கூறும் வசனங்களை தேடி வாசிக்கிறார்கள்.

யாக்கோபு 1:2 " நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது ........ அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்"

பிலிப்பியர் 4:4 "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்".

I பேதுரு 1:8 "அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களி கூர்ந்து.."

உலகத்தில் கிறிஸ்தவர்கள்தான் அதிகம் சந்தோஷப்படுகிறவர்களாக இருக்க வேண்டும்.

# வேதாகமக் கேள்வி பதில்

**கேள்வி:** குழந்தை தாயின் கர்ப்பத்தில் உருவாகும் போதே தேவனுக்கு அது தெரியுமா?

**பதில் :** நிச்சயமாக! சங்கீதம் 139:13-15ல் தாவீது எழுதும் போது, "நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர், நான் பிரமிக்கத்தக்க அதிசய-மாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்-கப்பட்ட போது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. எரேமியாவிடம் தேவன் கூறுகையில், "அவர் : நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே, உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளை-யிட்டேன் என்று சொன்னார்" (1:5)

தாயின் கர்ப்பத்திலிருந்த தாவீதையும், எரேமியாவையும் தேவன் அன்று அறிந்திருந்தார் என்றால், இன்றைக்கும் அவர் அறிந்தே இருக்கிறார்.

**கேள்வி:** உங்கள் இருதயங்களில் தேவன் வாசம் செய்ய வந்தால் என்னவாக நினைப்பீர்கள்?

**பதில் :** வேதாகமத்தில் இருதயம் என்று பேசப்படுவது நம்முடைய மனதை அல்லது நம்முடைய புரிந்து கொள்ளுதலைக் குறிக்கிறது. கர்த்தரு-டைய வார்த்தையாகிய வேதாகமத்தை நம்முடைய மனதிற்குள் (வேதாகம இருதயத்தில்) ஏற்றுக் கொள்வோமானால், பின்பு விசுவாசித்து, கர்த்தருக்கு கீழ்ப்படியும் படி ஒப்புக் கொடுத்தால், தேவன் நம்முடைய இருதயத்தில் (மனதில்) வாசமா-யிருப்பார். அவர் நம்முடைய சரீரத்தில் வந்து வாசமாயிருப்பதில்லை. அவர் நம்மிடத்தில் வாசமாயிருக்கிறார் என்று ஏன் சொல்லப்படுகிறது என்றால், நாம் அவருடைய வார்த்தையை (வேதாகமத்தை) நமக்குள் வாசம் செய்ய அனுமதிப்பதால் தான். (கொலோ 3:16). வேதாகமத்-திற்கு ஒருவன் கீழ்ப்படியும் போது அவன் விடுதலையான-வனாகவும் (யோவான் 8:32), சந்தோஷமானவனாகவும் (அப் 8:39) உணர்கிறான். ஏன் என்றால் நம்முடைய கீழ்படிதலில் நாம் செய்த எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு தேவனுடைய உண்மைப் பிள்ளைகளாகவும் மாறுகிறபடியால் நாம் தேவனுக்கு பிரியமானவர்களாக இருப்போம்.

# விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாம், சக்திவாய்ந்த சில தாக்குதலின் மூலமாக கீழே விழும்படி தள்ளப்படலாம். நமது அன்புக்குரிய ஒருவர் மரித்துப் போகலாம், அல்லது வேலையை இழந்து போகலாம். அல்லது பதவி உயர்வு புறக்கணிக்கப்பட்டு இருக்கலாம். பாவத்தில் விழுந்து போனதைப் பற்றி நாம் கலக்கமடைந்திருக்கலாம். விழுவது ஒரு காரியம். மனம் தளர்ந்து விடுவது மற்றொரு காரியம். மறுபடியுமாக நாம் எழுந்து கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை உறுதிபடுத்தி, தொடர்ந்து அவரை சேவித்து வருவோமானால் முற்றிலும் நாம் தள்ளுண்டு போவதில்லை. இதைக் குறித்து ஞானி சாலமோன் கூறுவதைக் கேளுங்கள். நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் எழுந்திருப்பான். (நீதி - 24:16)

ஏனென்றால் நீதிமானுக்கு தேவன் தீபமாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார். (சங் 119:105)

என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர் என்று சங்கீதக்காரன் தாவீது கூறுகிறார். (சங் 18:35)

**சிலர் விழுந்துவிட்டால் எழுந்திருப்பதில்லை ஏன்?**

ஏனென்றால் அவர்கள் அவிசுவாசிகள். அவர்கள் மாம்சத்தின் இச்சைக்கும், பாரம்பரியத்திற்கும் அடிமைப்படும் பொழுது (I. தீமோ 6:10, I பே 1:18) விழுந்து போகிறார்கள். பண ஆசை எல்லா தீமைக்கும் வேர்; சிலர் அதை இச்சிப்பதினாலே விழுந்து விடுகிறார்கள் என்று எபிரேய ஆசிரியர் கூறுகிறார் (எபி 13:5). பவுல், கலாத்தியா நாட்டு சபை மக்களைப் பார்த்து தேவனை அறியாமலிருந்த பொழுது உலகத்திற்கு அடிமைகளாய் இருந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ தேவனை அறிந்திருக்கிறீர்கள். (கலா 4:8,9) நீங்கள் உலக இச்சைகளுக்கு அடிமைப்படாமல் இருங்கள். நீங்கள் கிறிஸ்தவ ஓட்டத்திலே நன்றாய் ஓடினீர்கள். ஏன் விழுந்து விட்டீர்கள்? உங்களை விழச் செய்தவன் யார்? என்று விழுந்து விட்ட விசுவாசிகளைப் பார்த்து கேட்கிறார். அது மாத்திரமல்ல. அவர்கள் விழுந்து விட்ட காரணத்தையும், தெரிந்து கொண்டு அவர்களைப் பெலவீனப்படுத்தவில்லை. மாறாக, அவர்களை அன்பாய்க் கடிந்து கொண்டு புத்தி சொல்லி விழுந்துவிட்ட அவர்களை மீண்டும் எழுந்து நிற்கும்படி அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அத்துடன் அவர்களுடைய முந்தைய கிறிஸ்தவ சாட்சியுள்ள வாழ்க்கையை நினைப்பூட்டி, நீங்கள் நன்றாய் ஓடினீர்களே என்று அவர்களுடைய பெலவீனத்திற்குரிய காரணத்தை கண்டறியும்படி கூறுகிறார். பந்தயச் சாலையில் ஓடுகிறவன் இச்சையடக்கத்தோடு பொறுமையோடே ஓடினால் நாம் விழமாட்டோம் என்று திட்டவட்ட-

மாக அடித்துக் கூறுகிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (1 கொரி 9:24,25) (II கொரி 4:8,9). விழுந்துவிட்ட ஆத்துமாவை நாம் என்ன செய்யவேண்டும்? அவர்களை தூக்கி நிறுத்த வேண்டும். அவர்கள் விழுந்துவிட்டதை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு தூற்றித் திரியக் கூடாது. விழுந்துபோன நீதிமான் சொல்வதைக் கேளுங்கள் (மீகா 7:8,9) எனக்கு விரோதமாய் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன். நான் இருளிலே உட்கார்ந்தால் கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். விழுந்துவிட்ட (அ) காயப்பட்ட விசுவாசியை சுடுகிற ஒரு கூட்டம் உண்டென்றால் அது கிறிஸ்தவக் கூட்டத்தினர் மட்டுமே. அடிக்கடி கூறப்படுகிற ஒரு கூற்று இது. ஆனால் மெய்யாகவே விழுந்து விட்டவர்களை (அ) காயப்பட்டவர்களை சுடுகின்ற தவறைச் செய்கிறார்களா? பிற விசுவாசிகள் வீழ்ந்திடும் பொழுது, அவர்களைக் கிறிஸ்தவர்கள் கைவிட்டு விடுகின்றனர் என்பது மிகவும் துக்ககரமானதாகும். ஏனெனில், அடிக்கடி மற்றவர்கள் குற்றத்தில் சறுக்கிவிழும்போது, பாவத்தின் விளைவுகளால் காயப்பட்டிருக்கும் பொழுது, விசுவாசிகள் நியாயந்தீர்க்கிறவர்களாக மாறிவிடுகின்றனர். ஆனால், கவனிக்கவும் : பாவத்தினால் ஏன் அந்த விசுவாசி விழுந்துவிட்டார் என்பதல்ல காரியம். எப்படி அந்த விசுவாசி எழுந்திருப்பான் (அ) சீர்ப்பொருந்தப் பண்ணப்படுவான் என்பதே முக்கியம். நம் எல்லோருக்கும் ஒரு வாய்ப்பு அருளப்பட்டிருப்பது தேவனுடைய ஈவு. தேவன் சீர் பொருந்தப் பண்ணுகிற தேவனாயிருக்கிறார். அவர் நாம் அறிக்கையிட்ட பழைய பாவங்களை மனதில் கொள்ளுகிறவரல்லர். அந்த மனந்திரும்பிய மைந்தனைச் சற்று கேளுங்கள். சற்றுக் கண்ணாடியில் உங்களைப் பாருங்கள்;

வீழ்ந்துவிட்ட பரிசுத்தவான்களைச் சீர் பொருந்தச் செய்கிற பொறுப்பு கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (கலா 6:1) நாம் அந்தத் திருப்பணியில் விசுவாசமுள்ளவர்களாய்ச் செய்வோம்? "ஒருவன்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அதாவது நம்மைப் போன்றவனே ஒருவன். அவனுக்கு ஆசைகள், பேராவல்கள் நம்மைத் தூண்டுவதைப் போன்றே இருக்கின்றன. நம்மைப் போலவே அவனும், அவளும், மாம்சத்தில் நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள். ஆகவே, நமக்கு நேரிடும் சோதனைகளை சந்திக்கிறார்கள். ஏனெனில், சோதனைகள் எல்லா மனிதர்களுக்கும் பொதுவாயிருக்கிறது (1 கொரி 10:13) ஒரு விசுவாசி சோதனையிற் சிக்கி, திகைத்து நிற்கும் போது அல்லது வீழ்ந்துவிடும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? திருச்சபையார் அந்த விசுவாசியை எவ்வாறு நோக்க வேண்டும்? இப்பிரச்சனையை எப்படி நாம் அணுகுவது?

- நாம் அவரை ஒதுக்கிவிடலாமா?


- அவரைப் பற்றித் தவறான எண்ணங்களைப் பரப்பலாமா?

ஒரு உண்மையைக் கவனியுங்கள். பாவமானது பெரியதாகவோ சிறியதாகவோ (மக்கள் பார்வையில்) இருக்கலாம். ஏற்றுக் கொள்ள முடியாததாகவோ, அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவோ இருக்கலாம். கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்து யாதெனில், ஒரு கிறிஸ்தவ சகோதரன், சகோதரி, பாவத்தினால் மேற்கொள்ளப்படலாம். "மேற்கொள்ளப்படுதல்" என்ற வார்த்தையை கவனிக்க வேண்டியது இங்கே அவசியம். அதன் பொருள் எதிர்பாராத விதமாக பாவத்தால் மேற்கொள்ளப்படுவதாகும். தான் பாவத்தில் வீழ்ந்து விடும்போது ஓர் உண்மையான விசுவாசி சந்தோஷப்படுவதில்லை. ஏனெனில், அவர் கிறிஸ்துவுக்கு சொந்தமாயிருக்கிறார். கிறிஸ்துவில் ஜீவிக்கிறார். எப்படியிருப்பினும், ஒரு சகோதரன், சகோதரி பாவத்தில் அகப்பட்டு வழுவி வீழ்ந்திடும்போது செய்ய வேண்டியதென்ன? வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது; கிறிஸ்தவ சகோதரர்கள் அவர்களை சீர்பொருந்தப் பண்ண வேண்டும்.

"சீர் பொருந்தப் பண்ணுதல்" என்ற வார்த்தை முறிந்து போன கையை அல்லது காலை மீண்டும் பொருந்த வைப்பதற்கு சமம். அறுந்த வலைகளை சீர்படுத்துவது என்றும் பொருள் உண்டு. அப்பேர்ப்பட்டவர்களை சரிபடுத்த, சீர் பொருந்தப்பண்ண, பாவத்தை வெட்டியெடுத்து உதவ, அவர்களை ஒழுங்குபடுத்த, மீண்டும் அவர்களை வழிநடத்த விசுவாசிகள் உதவ வேண்டும். பாவத்தில் விழுந்து விடுகின்ற சகோதரர்களைச் சீர்பொருந்தப் பண்ணுவதற்கு ஆயத்தம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் அவரை நோக்கி நடப்பவர்களாயிருக்க வேண்டும். விழுந்து போகாதபடி நடக்க கர்த்தரை நோக்கி கேட்க வேண்டும். என் காலடிகள் வழுவாதபடிக்கு என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும், என்று தாவீது கர்த்தரிடத்தில் கேட்கிறார் (சங் 17:5) கர்த்தர் சொல்லுகிறார். என் மகனே கேள் செவ்வையான பாதைகளிலே உன்னை நடத்தினேன் (நீதி 4:11) வலது புறமாவது இடது புறமாவது சாயாதே; உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக. ஆகவே, நாம் பொறுமையோடே பெற்றுக் கொள்ளும்படியாய் ஓடவேண்டும் (எபி 12:1 1 கொரி 9:24) அப்படி நீ அவைகளில் நடக்கும் போது உன் நடைகளுக்கு இடுக்கண் உண்டாவதில்லை; நீ அவைகளில் ஓடினாலும் இடறமாட்டாய் (நீதி 4:12 சங் 23:3,4) நல்ல மனுஷருடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்; அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார். கிறிஸ்துவுக்குள் ஜீவித்துக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் இருக்க வேண்டும். (1 கொரி 15:58) அப்படி ஜீவித்துக் கொண்டிருக்கிற வைராக்கியமுள்ள எந்த ஒரு விசுவாசியும் அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை (சங் 37:24) ஏனென்றால் கர்த்தர் தமது வலது கையினால் அவனைத் தாங்குகிறார்.

**யோசுவா செல்வம்**
**அரக்கோணம்.**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00-9.15 p.m. | Box.3815<br>New Delhi-110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00-2.15 p.m. | Box.80<br>Kakinada-533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box.8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DEL
Postal Regn. No. TN / WR / ER / 77 / 2001.

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு

செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்

நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக

முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,

அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,

த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**

Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**